The Biblical History of Israel

இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரம்...

Presented by

Rev. D. David

Lesson: 02

Part: One

Introduction / அறிமுகம்







- <u>யூத மதம்</u>: இஸ்ரேல் தேசம் தனித்தன்மை கொண்டது; ஏனெனில் இதன் வரலாறு வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இஸ்ரேல் தேசத்தின் வரலாறு சுமார் 4000 ஆண்டுகளுக்கு முந்தையது. யூத மதம் என்பது ஒரே கடவுள் என்ற கோட்பாடும் மற்றும் சிறந்த கொள்கைகள், நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட மதம். உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம், யூத மதத்தின் வழிதோன்றல் ஆகும். பண்டைய இஸ்ரவேலரின் அனைத்து ஆன்மீக நம்பிக்கைகளும், நெறிமுறைகளும் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள மக்களின் வாழ்க்கையை உறுவாக்கிய சிறப்பை பெறுகிறது.

- <u>மூன்று ஆதாரங்கள்</u>: பண்டைய இஸ்ரேலின் வரலாற்றை தெரிந்துகொள்ள மூன்று ஆதாரங்கள் அடிப்படையாக உள்ளன. அவை தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், எபிரேய வேதாகமம் மற்றும் எபிரேய வேதத்திற்கு வெளியே எகிப்தியர்கள், அசீரியர்கள், பாபிலோனியர்கள், பெர்சியர்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்களின் பதிவுகள் மற்றும் கல்வெட்டுகள் இஸ்ரேலின் வரலாற்றை விளக்குகின்றன. யூத எழுத்தாளர் ஜோசிபஸ் (கி.பி 37–103) என்பவர் எழுதிய இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு, யூதர்களின் போர்கள் ஆகியவை மற்றும் குறிப்பாக பண்டைய இஸ்ரேலின் வரலாற்று சரித்திரத்திற்கு முக்கியமான ஆதாரங்களாக உள்ளது.

- <u>ஆதியாகமம்</u>: ஆதியாகமம் புத்தகம் இஸ்ரவேல் தேசத்தின் தோற்றம் பற்றி குறிப்பிடுகிறது. ஆபிரகாமுக்கும், குறிப்பாக அவரது பேரன் யாக்கோபின் பன்னிரண்டு மகன்கள், பிற்காலத்தில் இஸ்ரேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் முன்னோடிகளாக மாறுகின்றார்கள்.

இஸ்ரவேலின் தோற்றம்



SHEM	the Assyrians (Asshur), the Syrians (Aram), the Hebrews (Eber), and the Joktanian Arabs (Joktan),
HAM	`Cush', i.e., the Ethiopians; `Mizraim,' the people of Egypt; `Sheba and Dedan,' or certain of the Southern Arabs; and `Nimrod,' or the ancient people of Babylon,
JAPHETH	Cymry or Celts (Gomer), the Medes (Madai), and the Ionians or Greeks

- <u>எபிரேயர்களின் தோற்றம்</u>: இதற்கு இரண்டு முக்கிய வாதங்கள் உள்ளன. இரண்டுமே வேதாகமத்திலிருந்து உருவாகின்றன. ஒன்று ஆதியாகமம் புத்தகத்தில் முற்பிதாக்கள் மற்றொன்று யாத்ராகமம் புத்தகத்தில் எகிப்திலிருந்து வெளியேறியவர்கள் மூலமாக தோன்றுகிறது.
- <u>முற்பிதாக்கள்</u>: ஆபிராம் கி.மு 2006 ல் பிறந்து பின்னர் இன்றைய தெற்கு ஈராக்கில் ஊர் என்ற இடத்தில் இருந்து குடிபெயர்ந்தார் என்று ஆதியாகமம் கூறுகிறது. தற்போதைய துருக்கிய–சிரிய எல்லைக்கு அருகிலுள்ள ஹரானில் ஆபிரகாமின் தங்கி இருந்து பின்னர் கானான் தேசத்திற்கு வருகிறார். இப்படியாக முற்பிதாக்களின் மூன்று தலைமுறையான வாழ்க்கை மூலம் இஸ்ரவேல் தேசத்தின் முதல் சரித்திரம் ஆரம்பிக்கிறது.
- <u>அடிமை தனத்திற்கு வெளியே</u>: யாத்திராகத்தில் ஆபிரகாம் சந்ததியினர் எகிப்தில் சுமார் 430 ஆண்டுகள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, பின்னர் சீனாய் வனாந்தரத்தில் பயணம் செய்து முற்பிதாக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்குத் திரும்புதல் ஆகியவற்றுடன் இரண்டாவது சரித்திரம் ஆரம்பிக்கிறது.
- <u>எபிரேயர்களின் பெயரிடுதல்</u>: யூத மக்கள்– எபிரேயர்கள், இஸ்ரவேலர் மற்றும் யூதர்கள் என மூன்று மாற்றுப் பெயர்களால் அறியப்படுகிறார்கள். ஹீப்ரு (Hebrew), ஐவ்ரி (Ivri) என்ற வார்த்தைகள் வேதாகமத்தில் ஒரு இனத்தின் விளக்கமாக பயன்படுத்தப்படுகிறது. வேதாகமத்தில் 'இப்ரி (Ibri)' என்பது நோவாவின் மகன்களில் ஒருவரான 'ஈபர் (Eber) என்பதிலிருந்து உருவானது. வேதாகமத்தில் ஆபிரகாம் என்பவர் சேம் என்பவரின் வழித்தோன்றலாக அடையாளம் காணப்படுகிறார், ஆபிரகாமின் மூலம் 'இப்ரி (Ibri)' என்பது பின்னர் ஈபர் (Eber) சந்ததியினருக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆபிராமுக்கு கடவுளின் அழைப்பு (2091 BCE)



- ஆபிரகாமோடு உடன்படிக்கை: கிமு 1960 இல் கடவுள் ஆபிராம் என்ற மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்தினார். கடவுள் அவரிடம் கல்தேயர்களின் (தெற்கு ஈராக்) ஊர் என்ற இடத்தைவிட்டு வெளியேறும்படி கூறி, தான் கான்பிக்கும் தேசத்திற்கு போகும்படியாகவும் அங்கே ஒரு பெரிய தேசத்தை உண்டாக்கும்படி கூறி ஆபிராமோடு கடவுள் உடன்படிக்கை பன்னினார். ஆபிராமும் கடவுள் சொன்னதை கேட்டு, அப்படியே கீழ்படிந்து தனது குடும்பத்தை கானானுக்கு மாற்றினார். இந்த வாக்குறுதிகள் ஆபிரகாமின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின்றன (ஆதி 12: 1–3). கானானில் ஆபிராமுக்கு கடவுள் பல வாக்குறுதிகளை கொடுத்து, அவருடைய பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார் (ஆதி 17: 5). இங்கு இருந்து இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரம் ஆரம்பிக்கிறது.
- முற்பிதாக்கள்: Patriarch (பேட்ரியார்க்) என்ற சொல் இரண்டு கிரேக்க வார்த்தையான Pater(பிதா) மற்றும் Aeche (முன்னோடி) ல் இருந்து வருகிறது, இதன் பொருள், பிதாக்கள் மற்றும் மரியாதைக்குரியவர்கள். இஸ்ரவேலின் முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆவார்கள்.
- இஸ்ரவேலர் என்போர் யார்?: ஆபிரகாமின் மகன்களில் எல்லோருக்கும் கடவுள் உடன்படிக்கை பண்ணவில்லை. ஆனால் ஈசாக்கை கடவுள் தேர்வு செய்கிறார், பின்னர் அவருடைய மகன் யாக்கோபு தேர்ந்தெடுத்தார். ஆபிரகாமின் பேரன் யாக்கோபை, இஸ்ரவேல் என்று கடவுள் மறுபெயரிடுகின்றார். இதன்பொருள் “கடவுளோடு மல்யுத்தம் செய்தவன்” என்பதாகும் (ஆதி 32:28, 35:10). இப்போது யாக்கோபு 12 மகன்களைப் பெற்றெடுக்கிறார். பிற்காலத்தில் இவர்கள் தான் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களாக அறியப்பட்டார்கள்.



Abraham's Journey
From Ur to Haran to Egypt
Mt. Ararat
Paddan Aram
Haran
Tigris R.
Nineveh
Mediterranean
Sea
Damascus
Euphrates R.
Arabian
Desert
Sumer
Canaan
Egypt
Babylon
Ur
NOT LICENSED
© GEOGRAPHY.BIBLE-HISTORY.COM
NOT LICENSED
Nile R.
Mt.
Sinai
Red
Sea
Bible History Online

Forefathers of Israel
ABRAHAM
ISAAC
ESAU
JACOB
12 Sons


Jacob
Leah
Zilpah
Bilhah
Rachel
Reuben
Simeon
Levi
Judah
Issachar
Zebulun
Gad
Asher
Dan
Naphtali
Joseph
Benjamin

முற்பிதாக்களின் காலம்



- <u>நாடோடி கூட்டத்தினர்</u>: ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்பவர்களின் காலத்தில், மத்திய கிழக்கு தரைக்கடல் பகுதிகளில் மக்கள் நாடோடி கூட்டங்களாக வாழ்ந்து வந்தார்கள். அப்போது அவர்களின் கருத்துக்கள் மற்றும் மத நம்பிக்கைகள் பற்றி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள். எந்த ஒரு நாடோடி குழுவும் மற்றவர்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தவில்லை. இந்த காலகட்டத்தில் பெரும்பாலான மக்கள் பல தெய்வங்களை கடவுளாக வணங்கினார்கள்.

- <u>ஒரே கடவுள் கோட்பாடு</u>: முற்பிதாக்கள் ஒரே கடவுளை மட்டுமே வணங்கினார்கள். அந்த கடவுள் அவர்களோடு இடைபட்டு, எவ்வாறு நல் வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிந்தால் நிறைந்த செல்வ செழிப்பான கானான் தேசம் முழுவதும் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் சொந்தமாக கொடுப்பேன் என்று வாக்குறுதியும் கொடுத்தார். இந்த உடன்படிக்கை மற்றும் கடவுள் தேர்ந்தெடுத்த மக்கள் மூலமாக, இஸ்ரவேலர்களின் பாரம்பரிய வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இந்த மக்கள் எபிரேய மொழி பேசினார்கள்: ஆகவே எபிரேயர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் தங்கள் வரலாற்றையும் அவர்களின் மத நம்பிக்கைகளையும் எழுதினார்கள். இதுவே எபிரேய வேதாகமமாக மாறியது.

- <u>முற்பிதாக்களின் முடிவு</u>: முற்பிதாக்களின் இறுதி நாட்களில், யாக்கோபின் (இஸ்ரவேல்) 12 மகன்கள் பெரிய சந்ததியாக எண்ணிக்கையில் மாறுகின்றார்கள். ஆரம்பகால இஸ்ரவேலர்கள் கால்நடைகளை மேய்ப்பவர்கள் மற்றும் வணிகர்களாக தொழில் செய்கின்றார்கள். கானானில் 100 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர், அங்கு ஏற்பட்ட வறட்சி மற்றும் பஞ்சம் காரணமாக எகிப்துக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த வறட்சியில் ஏராளமான பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வாடி, கால்நடைகள் இறந்தன. ஆகவே உயிர் பிழைக்க, இஸ்ரவேலர் எல்லோரும் எகிப்துக்குச் சென்றார்கள்(யாத் 1:1-5).

விருந்தினர்கள் எகிப்தின் அடிமைகளாக மாறினார்கள்





- யோசேப்பு: கிமு 1840 இல், எகிப்திய மன்னன் பார்வோனின் அழைப்பின் பேரில், இஸ்ரவேலர்கள் எகிப்துக்கு குடி பெயர்ந்தனர். கடவுள் ஏற்கனவே யோசேப்பை எகிப்திற்கு அனுப்பி இருந்தார். அங்கு பார்வோனின் கனவை விளக்கவே யோசேப்பின் நற்குணத்திற்காக எகிப்து தேசத்திற்கே ஆட்சியாளராக அமர்த்தப்பட்டார். எகிப்துக்கு வந்த தனது உடன்பிறப்புகளின் குடும்பத்திற்கு, யோசேப்பு கோசேன் நிலத்தையும், உடைமையையும் வழங்கினார்.
- விருந்தினர்கள் அடிமைகளாக மாறினர்: எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களை ஹபிரு என்றும் பரதேசிகள் (வெளிநாட்டினர்) என்று அழைத்தனர். எகிப்துக்கு வந்த இஸ்ரவேலர்களுக்கு மகிழ்சியான வாழ்க்கை நீண்ட காலம் நீடித்திருக்கவில்லை. 400 ஆண்டுகளில் இஸ்ரவேலர்களின் எண்ணிக்கையில் அதிகரித்தது. இப்போது யோசேப்பை அறியாத பார்வோன் ராஜா எகிப்தில் ஆட்சிக்கு வருகிறார். இவர் அரசியல் அச்சத்தால், எபிரேயர்களை அடிமைப்படுத்துகிறார் (யாத் 1). ஆகவே இஸ்ரவேலர்களை எகிப்தில் பிரமிடுகளைக் கட்டவும், பார்வோனுக்காக பித்தோம் மற்றும் ராமசேஸ் நகரங்களை கட்ட செய்கின்றார்.
- இனப்படுகொலை: எகிப்திய மன்னன் பார்வோன் அதிக எண்ணிக்கையிலான எபிரேயர்களைப் மேலும் ஒடுக்குவதற்கு, எபிரேயர்களுக்கு பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் நைல் நதியில் வீசும்படி கட்டளையிடுகின்றார். இஸ்ரவேலர்கள் இனப்படுகொலைக்கும் அவர்களின் குழந்தைகள், சிசுக்கொலைகளுக்கும் உட்படுத்தப்பட்டார்கள் 4). இஸ்ரவேலரின் கூக்குரல்: இந்த நேரத்தில் இஸ்ரவேல் மக்கள் கடவுளிடம் கூக்குரலிட்டு விடுதலை பெற ஏங்குகிறார்கள். ஆகவே கடவுள் தம் மக்களைச் எகிப்திய அடிமைதனத்திலிருந்து விடுவிக்க விரும்பினார். இதற்காக இஸ்ரவேலில் ஒரு நபரை ஆயத்தம் செய்கின்றார்.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

- மோசேயின் பிறப்பு (1430 BCE): ஒரு எபிரேய தாய் தனக்கு பிறந்த ஆண்குழந்தையை காப்பாற்வதற்காக, கூடையில் வைத்து, எகிப்தின் நைல் ஆற்றங்கரையில் அனுப்புகிறாள். அப்போது பார்வோனின் மகள் ஸ்நானம் பண்ண வந்த வேளையில், கூடையை கண்டு, அதில் இருந்த குழந்தையை வளர்க்க விரும்பி, மோசே என்று பெயரிட்டாள். மோசே எகிப்தின் அரன்மணையில் வளர்க்கப் படுகிறார். அங்கே எகிப்திய ஞானம், கலைகள், இலக்கியங்கள், போர் தந்திரங்கள், சட்டங்கள் மற்றும் நிர்வாக முறைகள் ஆகியவற்றை நன்கு கற்றுக்கொள்கிறார். இப்படியாக 40 ஆண்டுகள் கடந்த சூழ்நிலையில் அங்கே சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு எபிரேயர்களில் ஒரு எபிரேயரை அடிக்கும் எகிப்தியரை மோசே கொலை செய்கிறார். இதை அறிந்த பார்வோன் மோசேயை கொலை செய்ய காத்துக்கொண்டு இருக்கிறார். மோசே தன்னை காத்துயொள்ள எகிப்தில் இருந்து மீதியான் தேசத்திற்கு ஓடுகிறார் (யாத் 2: 11-15).
- எரியும் முட்செடி (1390 BCE): ஒரு நாள் மோசே,மீதியான் தேசத்தில் வனாந்தரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, எரியும் முட்செடியை கான்கிறார். அதன் அருகில் சென்றபோது கர்த்தர் மோசேக்கு தரிசனமாகி, இஸ்ரவேலரை எகிப்திய அடிமை தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்லும்படி மோசேயிடம் கூறுகின்றார் (யாத் 3: 1-22) ஆனால் இதை மோசே ஆட்சேபித்தார் (4: 1-17). இறுதியாக இஸ்ரவேலரை விடுவிப்பதற்காக எகிப்துக்கு தனது 80 ம் வயதில் திரும்புகிறார்.
- பார்வோனுக்கு முன்பாக மோசே: இஸ்ரவேலர்களின் கடவுளுக்கு பண்டிகை கொண்டாட வனாந்தரத்திற்குச் செல்ல அனுமதிக்கும்படி மோசே பார்வோனிடம் கேட்டுக்கொண்டார், ஆனால் பார்வோன் மறுத்துவிட்டார் (யாத் 5: 1,2). இந்நிலையில் இஸ்ரவேலரை விடுவிக்கும்படி கடவுள் 10 வாதைகளை எகிப்துக்கு அனுப்புகிறார். பார்வோனின் பலத்த போராட்டத்திற்கு பிறகு, மோசே இஸ்ரவேல் மக்ககளை எகிப்தின் 430 ஆண்டுகால அடிமைத்தனத்திலிருந்து, கர்த்தரால் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு அழைத்து செல்கின்றார் (யாத் 12:40).

© 2014 by Joe Anderson, licensed under Creative Commons (CC BY-NC-SA 4.0).

Waters Turn to Blood
Exodus 7:14-25

Amphibians (Frogs)
Exodus 7:26-8:11

Gnats (Lice)
Exodus 8:12-15

Flies
Exodus 8:16-28

Disease on Livestock
Exodus 9:1-7

The Ten Plagues of Egypt

Unhealable Boils
Exodus 9:8-12

Hail and Fire
Exodus 9:13-35

Locusts
Exodus 10:1-20

Darkness
Exodus 10:21-29

Death of First-Born
Exodus 11:1-12:36

Copyright Logos Bible Software 2008
Artwork by Aaron Schrade

சீனாய் மலைக்கு பயணம்

- விடுதலை பயணம் (கிமு 1390): Exodus என்பது கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "வெளியே செல்வது" (எகிப்திலிருந்து). இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியே சென்றபோது, பார்வோன் மனம் மாறி, அவர்களை மீண்டும் எகிப்துக்கு அழைத்துவர தன்னுடைய இணுவத்தை அனுப்பினார். கர்த்தர் மோசே மூலமாக செங்கடலை இஸ்ரவேலர்களுக்காக பிரித்தார், பின்பு தண்ணீரில் எகிப்தியர்களின் இரதங்கள் முற்றிலும் அழிந்து போயிற்று. இது இஸ்ரவேலர்களின் விடுதலை பயணத்தில் கர்த்தரின் கரம் கூடவே இருந்தற்கு சான்று ஆகும்.
- சீனாய் (கடவுளின்) மலை: இஸ்ரவேலர்கள் கானானுக்கு செல்லும் வழியில், கடவுளின் வழிநடத்துதலின்படி சீனாய் மலையடிவாரத்திற்கு வந்தார்கள். அங்கே சீனாய் மலை உச்சிக்கு கர்த்தர் மோசேயை அழைத்தார். பின்னர் கடவுள் இஸ்ரவேல் மக்களோடு உடன்படிக்கை செய்தார். அங்கே இஸ்ரவேலர்கள் வானத்தையும் பூமியையும் படைத்த யெகோவா தேவனை கடவுளாக ஏற்றுக்கொண்டனர். கடவுளும் அவர்களைத் தன்னுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார் (யாத் 19:1-8). இது சீனாய் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது.
- தோரா: கடவுள் மோசேயை மலையின் உச்சிக்கி அழைத்து, அங்கே மோசேக்கு பத்து கட்டளைகளை கொடுத்தார். பின்னர் மோசேக்கு தார்மீக(Moral), சமுதாய மற்றும் மதச் சட்டங்களையும் கொடுத்தார். இந்த 10 கட்டளைகளை அடிப்படையாக கொண்டு 613 (365 /எதுவெல்லாம் செய்ய கூடாது+ 248/ எதுவெல்லாம் செய்ய வேண்டும்) சட்டங்கள் உறுவாக்கப்படுகிறது. இதுவே தோரா(ஐந்து ஆகமம்) என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேலர்கள் கடவுளின் சட்டங்களைப் பின்பற்றினால் அவர்களுக்கு செழிப்பான கானான் தேசத்தை நிரந்தரமாக கொடுப்பதாக கர்த்தர் வாக்குறுதி கொடுத்தார்.

வனாந்தரத்தில் திரிதல் (1390–1350)



- **<u>கானானை நோக்கிய பயணம்</u>:** இஸ்ரவேலின் விடுதலை பயணத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளைத் தவிர்த்து 600,000 புருஷர்களை மோசே வனாந்தரத்தில் வழிநடத்தினார் (யாத் 12:37). இவர்களோடு புற இன குழுவினர்களும் இணைந்து கொண்டார்கள் (யாத் 12:38). இஸ்ரவேலர் வனாந்தத்தில் அமலேக்கியரோடு யுத்தம் பண்ணி அவர்களைத் துரத்தினார்கள் (யாத் 17: 8–13).
- **<u>பன்னிரண்டு உளவாளிகள்</u>:** மோசே கானான் தேசத்தை உளவு பார்க்க 12 பேரை அனுப்பினார். இதில் திரும்பி வந்த 10 பேர் கானான் தேசத்தை குறித்த துர் செய்தியை பரம்ப செய்தார்கள். பின்னர் திரும்பி வந்த யோசுவா மற்றும் காலேப் அவர்கள் நாம் கர்த்தரின் பலத்தோடு அதை உடனே சுதந்தரித்துக்கொள்ளளாம் என்றார்கள். ஆனால் ஜனங்கள் பெரும்பான்மையினரின் முடிவுகளையே நம்பி மோசேக்கு விரோதமாக செயல்பட்டார்கள். இது கடவுளின் பார்வையில் மிகப்பெரிய பாவமாக கருதப்பட்டது. இதற்காக இஸ்ரவேல் மக்களை 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்து திரிய விட்டார். மேலும், யோசுவா மற்றும் காலேப் தவிர விடுதலை பயணத்தின் போது எகிப்திலிருந்து வெளியேறிய எல்லா தலைமுறையினரும் வனாந்தரத்தில் இறந்துவிடுவார்கள் என்றும் மோசேயுடன் கர்த்தர் கூறினார் (எண் 13: 31–33).
- **<u>கானானுக்குள் நுழைதல்</u>:** எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரவேலர்களில் பழைய தலைமுறையினர் இறந்தபின்னர், புதிய தலைமுறையினர் வனாந்தரத்தில் அலைந்து திரிந் வாழ்க்கையால் ஒன்றுபட்டு, 40 ஆண்டுகளுக்குப் பிறகு கர்த்தர் அவர்களின் முற்பிதாக்களுக்கு வாக்குறுதி அளித்த பிரகாரம் கானான் தேசத்திற்குள் நுழைந்தார்கள்.

Traditional Route of the Exodus
Mediterranean Sea
Red Sea
Gulf of Suez
Gulf of Aqaba
LOWER EGYPT
GOSHEN
SINAI Peninsula
MIDIAN
MOAB
EDOM
Dead Sea
WILDERNESS OF SHUR
WILDERNESS OF ZIN
WILDERNESS OF PARAN
WILDERNESS OF SIN
The Way to the Land of the Philistines
The Way to Shur
The King's Highway
Traditional Route of the Exodus
Ashdod
Jerusalem
Heshbon
Hebron
Dibon
Gaza
Beersheba
Zoan/Tanis
Rameses
Succoth
Pithom
On (Heliopolis)
Noph (Memphis)
Kadesh-barnea
Punon
Petra
Ezion-geber
Rephidim
Mt. Sinai
Copyright 2011, Ralph F. Wilson <pastor@joyfulheart.com>. All rights reserved.
Map may be reprinted if copyright information remains intact.

கானானைக் கைப்பற்றுதல் (1240 BCE)

- <u>மோசேயின் மரணம்:</u> இஸ்ரவேல் மக்களின் விடுதலை பயணத்தில், கர்த்தர் மோசேயிடம் இஸ்ரவேல் மக்களுக்கு அடுத்த தலைவராக யோசுவாவை நியமிக்க கூறினார் (எண் 27:18-23). பின்னர் கானான் தேசத்தை நேபோ மலை உச்சியில் இருக்கும் பிஸ்காவில் இருந்து பார்க்க மட்டும் கர்த்தர் மோசேக்கு அனுமதி கொடுத்திருந்தார். அங்கே மோசே மரித்தார் (உபா 34:1-5). மோசே கடவுளின் கீழ் ஒரு விடுதலையாளராக, தலைவராக, சட்டமியற்றுபவராக மற்றும் தீர்க்கதரிசியாக இருந்து இஸ்ரேல் தேசத்தின் ஸ்தாபகராகவும், பிதாமகனுமாய் இருந்து த ஒட்டத்தை நிறைவு செய்தார்.
- <u>தளபதி யோசுவா:</u> யோசுவா மோசேயின் கீழ் நீண்டகாலம் தளபதியாக இருந்தார். இந்நிலையில் சுமார் 1200 BCE ல் மத்தியதரைக் கடல் பகுதியைச் சுற்றி பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. பல பேரரசுகள் ஆகாங்கே எழும்பி பின்னர் வீழ்ச்சியடைந்தன; இந்த சூழ்நிலையில் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழைகின்றார்கள். அங்கே பெரும்பாலும் கானானியர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தைக் கைப்பற்ற கடுமையாக போராட வேண்டியிருந்தது
- <u>வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்:</u> யோசுவாவும் கடவுளின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, மேற்கு கானானுக்குள் நுழைய யோர்தான் நதியைக் கடந்து பின்னர் மத்திய கானானுக்குள் செல்ல, முதலில் எரிகோ, ஆயி மற்றும் பிற பட்டணங்களை கைப்பற்ற மூன்று பெரிய யுத்தங்களை செய்ய வேண்டியதிருந்தது. கடவுளின் பராக்கிரமத்தினால் தொடர்ந்து பல வெற்றிகளையும் அடைந்தார்கள். பின்னர் யோசுவாவின் தலைமையில் புகழ்பெற்ற ஆயலோன் மற்றும் கிபியோனில் நீண்ட யுத்தத்தின் மூலம் காதேஸ்பர்நேயா துவங்கி காத்சா மட்டும் இருக்கிற இடங்களையும் கிபியோன் முதல் மட்டும் கோசேன் தேசம் வரை அனைத்தையும் இஸ்ரவேலர்கள் கைப்பற்றினார்கள் (யோசு 10: 1-41). இறுதியில் இஸ்ரவேலர்கள் கானானை மீட்டெடுத்து அவற்றை 12 கோத்திரங்களுக்கிடையில் பிரித்தார்கள் (யோசு 19:51).

Division of
the Promised Land
c. 1398 B.C.
Sidon
Leontes R.
Mt. Hermon
Tyre
Dan
ASHER
NAPHTALI
Hazor
MANASSEH
Ashtaroth
MEDITERRANEAN
SEA
Sea of Galilee
ZEBULUN
Yarmuk R.
Ramoth
-gilead
ISSACHAR
Megiddo
Jezreel
MANASSEH
Jordan River
Zaphon
Shechem
Mahanaim
Jabbok R.
Joppa
Shiloh
GAD
DAN
EPHRAIM
Ai
Bethel
Rabbah
BENJAMIN
Ashdod
Jerusalem
Ashkelon
PHILISTINES
Lachish
REUBEN
Gaza
DEAD SEA
Hebron
Arnon R.
JUDAH
Beersheba
SIMEON
MOABITES
Zered R.
EDOMITES
Kadeshbarnea
biblestudy.org

Turkey
Turkmenistan
Syria
Lebanon
West Bank
Gaza Strip
Iraq
Iran
Afganistan
Jordan
Kuwait
Pakistan
Egypt
Saudi Arabia
Bahrain
Qatar
Dubai
UAE
Sudan
Oman
Yemen

நியாயாதிபதிகள் காலம் (1375-1043 BCE)





- <u>நீதிபதிகளின் காலம்</u>: யோசுவா இறந்த பிறகு, இஸ்ரவேலர்களை நியாயாதிபதிகள் வழிநடத்தினார்கள். இஸ்ரவேலர்களை 14 நியாயாதிபதிகள் பல்வேறு காலகட்டத்தில் சுமார் 330 ஆண்டுகள் வழிநடத்தினார்கள். இவர்களின் பெயர்கள் ஒத்னியேல், ஏகுத், சம்கார், தெபோரா, கிதியோன், ஏலி, சிம்சோன், யெப்தா, தோலா, ஜாவீர், ஏலோன், இப்சான், அப்தோன், மற்றும் சாமுவேல் ஆவார்கள். பொதுவாக, நியாயாதிபதிகள் ஒன்று அல்லது இரண்டு கோத்திரங்களுக்குத்தான் தலைவராக இருந்தார்கள். ஆனால் சிலர் மாத்திரமே 12 கோத்திரங்களுக்கும் தலைவராக இருந்தார்கள். ஆபத்து காலகளில் அவர்கள் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து பகைவர்களிடம் இருந்து நியாதிபதிகள் இஸ்ரவேலர்களை காப்பாற்றி, நியாயம் விசாரித்தார்கள்.

- <u>கடவுளின் தண்டனை</u>: இஸ்ரவேல் மக்கள் கானானியர்களை முழுமையாகக் அழிக்க தவறிவிட்டதோடு மாத்திரம் அல்லாமல் அவர்களின் விக்கிரகாராதனை, ஒழுக்கக்கேடுகள்களை பின்பற்றினார்கள். எப்போதெல்லாம் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மறந்தார்களோ அப்போதெல்லாம் கர்த்தரின் கோபத்திற்கு ஆழானார்கள். பாவத்தின் சுழற்சி: கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்தல் (இஸ்ரவேலர் கர்த்தருக்கு முன்பாக தீமை செய்தார்கள்--> கடவுளின் நியாயதீர்ப்பு (கர்த்தர் அவர்களை எதிரிகளின் கைகளில் ஒப்புவித்தார்) --> கர்த்தரிடம் மனந்திரும்புதல் (இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடம் கூக்குரலிட்டபோது) --> நியாயாதிபதிகள் மூலம் விடுதலை (கர்த்தர் ஒரு விடுதலையாளரை எழுப்பினார்).

- <u>நியாயாதிபதிகள் காலம் முடிவு</u>: சுமார் 330 ஆண்டுகளாக இஸ்ரவேல் மக்கள் மத்தியில் நிலையான அரசாங்கமும் இல்லாததால் 12 கோத்திரத்தார் மத்தியில் சரியான ஐக்கியம் இல்லாமல் இருந்தது. ஆகவே, எல்லோரும் அவரவர் தன்தன் பார்வைக்கு சரியானதை செய்து வந்தார்கள் (நியா 21:25). இஸ்ரவேலர்களின் இறுதி நீதிபதியாக சாமுவேல் 40 ஆண்டுகள் நியாயம் விசாரித்தார் (1 சாமு 4:18).

ராஜா தேவை என்ற கரகோசம்

- <u>பெலிஸ்தர்கள்</u>: கி.மு 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கானானில் வாழ்ந்தவர்களில் பெலிஸ்தர்கள் பலம் வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேலருக்கு பெரிய அச்சுறுத்தலாக இருந்தார்கள். பெலிஸ்தியர்கள் பல பாதுகாப்பான நகரங்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களிடம் இரும்பு போர் தளவாடங்கள், மற்றும் ஆயுதங்களில் ஏகாதிபத்தியம் (Monopoly) செலுத்தினார்கள். பெலிஸ்தர்கள் பலமுறை ஆசாரியர்களை கொலை செய்து பல கோத்திரங்களை கட்டுப்பாடில் வைத்திருந்தார்கள்.
- <u>கோரிக்கை</u>: இஸ்ரவேலர்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ விரும்பினார்கள். ஆகவே இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் ஒன்றிணைத்து, பலப்படுத்த ஒரு ராஜாவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நியாதிபதியாக இருந்த சாமுவேல் தீர்க்கதரிசியிடம் கோரிக்கை வைக்கின்றார்கள். சமஸ்த இஸ்ரவேலுக்கு என்று ஒரு ராஜா இருந்தால், அவர் எல்லோரையும் ஒன்றிணைத்து பெலிஸ்தர்களை எதிர்த்துப் போராடுவார் என்று அவர்கள் நம்பினார்கள் (1 சாமு 8:5).
- <u>இஸ்ரவேலின் முதல் ராஜா</u>: இஸ்ரவேலர்கள் ராஜாவை விரும்பி, கர்த்தரையும் அவருடைய அதிகாரத்தையும் நிராகரிப்பதாக சாமுவேல் கண்டார். இதை சாமுவேல் எச்சரித்தார் (1 சாமு 8: 10-20). ஆனால் இஸ்ரவேலர்கள் பூமிக்குரிய ராஜாவுக்காக அதிக கூச்சலிட்டனர். ஆகவே கர்த்தருடைய ஆலோசனைப் படி பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த சவுல் என்ற திறமையான வாலிபனை ராஜாவாகத் தேர்ந்தெடுக்கிறார் (1 சாமு 9:17). அப்படியே ராஜாவின் உரிமைகள் மற்றும் கடமைகளை பற்றி ஒரு அரசியல் அமைப்பு சட்டத்தை சாமுவேல் இயற்றினார். பின்னர் சமஸ்த இஸ்ரவேலின்மேல் ராஜாவாக சவுலை சாமுவேல் அபிஷேகம் செய்தார். இப்பொழுது இஸ்ரவேலர்களை வழிநடத்துவதற்கு நியாயாதிபதிகளிடமிருந்து ராஜாங்க ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுகிறது (1 சாமு 10: 1,24,25).

சவுல் ராஜா (1043-1011 BCE)

- <u>சவுல்:</u> சவுல் இஸ்ரவேலரின் முதல் ராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். சவுல் ராஜாவாக பொறுப்பு ஏற்றவுடன் 12 கோத்திரத்தையும் ஒரே தேசமாக ஒன்றிணைக்க அம்மோனியர்கள், பெலிஸ்தர்கள் மற்றும் அமலேக்கியர்கள் ஆகியோர் ஆக்கிரமித்திருந்த பகுதிகளின் மீது வெற்றிபெற்று தனது இராணுவத் திறனைக் சவுல் ராஜா நிறுபித்தார்.

- <u>ஒத்துழையாமை:</u> சவுல் பல யுத்தத்தின் மூலம் இஸ்ரவேலர்களின் பல எதிரிகளை தோற்கடித்தார், ஆயினும கர்த்தருக்கு அருவருப்பான காரியங்களை செய்ய ஆரம்பித்தார். கர்த்தருக்கு கீழ்படியாததினால் தொடர்ச்சியான வீழ்ச்சியை சவுல் ராஜா சந்தித்தார்(1 சாமு 15:22,23). இந்நிலையில் கர்த்தர் தாவீதை அபிஷேகம் செய்யும்படி சாமுவேல் தீர்க்கதரிசிக்கு கட்டளையிட்டார் (1 சாமு 16:12).

- <u>பொறாமை:</u> காலபோக்கில் சவுல், சாமுவேல் சொல்லை கேளாமலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. மேலும் படைத்தலைவனாக அமர்த்தப்பட்ட தாவீதின் மீது சவுல் ராஜாவுக்கு பொறாமை உண்டாயிற்று. ஏனெனில், பெலிஸ்தியரின் மாபெரும் வீரன் கோலியாத்தை கொன்றதன் மூலம் தாவீதின் புகழ் இஸ்ரவேலர் மத்தியில் பரவ ஆரம்பித்தது. சவுல் தாவீதை இஸ்ரவேலின் இராணுவ படைகளுக்கு தலைவனாக வைத்தார். தாவீதின் வெற்றிகள் அதிகரித்தவுடன், சவுல் அவனைக் கொல்ல சதி திட்டம் செய்தார். இதைக்கேள்விப்பட்ட தாவீது வனாந்தரத்திற்குள் ஓடிவிட்டார்.

- <u>இறப்பு:</u> பெலிஸ்தர்கள் கி.மு 1011 ம் ஆண்டு, இஸ்ரவேலின் வடதேசத்தை தென்தேசத்தோடு தொடர்பு கொள்ள முடியாதவாறு துண்டித்துவிட்டார்கள். ஆகவே பெலிஸ்தியருக்கு விரோதமாக சவுல் தனது படைகளோடு கில்போவா மலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஏற்பட்ட யுத்தத்தில் பெலிஸ்தர்கள் வெற்றிபெற்று சவுலையும் அவரது 3 மகன்களையும் கொன்றுபோட்டார்கள் (1 சாமு 31:1-8). தென்திசை கோத்திரத்தார் தாவீதை இராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள். சில காலங்கள் சவுல் குடும்பத்திற்கும் தாவீது குடும்பத்திற்கும் பகைமை உண்டாயிற்று. அதற்கு பின்னர் வடக்கு கோத்திரங்களின் மூப்பர்கள் தாவீதை எல்லா கோத்திரங்களுக்கும் ராஜாவாக ஆழுகைசெய்ய அழைத்தார்கள் (2 சாமு 5:1-3).

தாவீது ராஜா (1011-967 BCE)

- <u>தாவீது</u>: கிமு 1004 இல் சவுல் இறந்த பிறகு சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஏற்படுத்தப்பட்ட பிறகு இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களையும் வெற்றிகரமாக ஒன்றிணைத்தார். தாவீது எபூசியர்களிடம் இருந்து எருசலேமைக் கைப்பற்றி இஸ்ரவேலின் தலைநகரை எபிரோனிலிருந்து எருசலேமுக்கு மாற்றினார். இது வடக்கு கோத்திரங்களையும் தெற்கு கோத்திரங்களையும் இணைக்கும் எல்கையில் இருந்ததால் சிறந்த நிர்வாகத்தை கொடுக்க வசதியாக இருந்தது.

- <u>தொடர் வெற்றி</u>: தாவீது ராஜா தொடர்ந்து இஸ்ரவேலின் எதிரி தேசங்கள் மேல் போர் புரிந்து அவர்கள் முன்பு இஸ்ரவேலில் கைப்பற்றிய பகுதிகளை மீட்டெடுத்து இஸ்ரவேல் தேசத்தை பலம்வாய்ந்ததாக மாற்றினார். பெலிஸ்தர்களை அப்பகுதியிலிருந்து தாவீதுராஜா விரட்டியடித்து இரும்பு உலோகத்தைப் பயன்படுத்தும் பெலிஸ்தர்களின் ஏகாதிபத்தியத்தை முறியடித்தார். பின்னர் மேலும் சில தேசங்களை கைப்பற்றி, தாவீது ராஜா ஒரு பெரிய பேரரசை உருவாக்கி, பல அண்டை நாடுகளை வெற்றி பெற்று அவர்களை கப்பம் கட்டச்செய்தார். இப்போது கானான் தேசம் எல்லாம் இஸ்ரவேல் தேசத்தின் ஆளுகைக்குள் வந்தது.

- <u>எருசலேம் தேவாலயம்</u>: தாவீது கர்த்தர் மீது மிகுந்த பற்றி கொண்டு அவருடைய நாம மகிமைக்காக எருசலேமில் பிரமாண்ட ஆலயம் கட்டுவதற்கு திட்டமிட்டார். ஆகவே, சேனைகளின் கர்த்தர் வாசம் செய்யும் பரிசுத்த உடன்படிக்கை பெட்டியை யூதா கோத்திரத்தில் உள்ள கீரியாத் யாரீமிலிருந்து பென்யமீன் கோத்திரத்தில் இருந்த எருசலேமுக்கு கொண்டு வந்தார். இப்போது எருசலேம் இஸ்ரவேல் தேசத்தின் மதம் மற்றும் அரசியல் மையமாக மாற்றியது. தாவீது பல சங்கீதங்களை இயற்றினார், மேலும் எருசலேயம் ஆலத்தின் ஆராதனைக்காக லேவியர்கள் மூலம் பாடகர்குழுவினரையும் இசைக்கலைஞர்களையும் உறுவாக்கினார். தாவீதின் காரியம் ஜெயமாய் இருந்தது(1 சாமு 5:10). கர்த்தர் தாவீதுடன் உடன்படிக்கை செய்து, அப்படியே தாவீதின் குமாரன் தான் ஆலயத்தைக் கட்டுவார் என்றும் கூறினார் (2 சாமு 7:5-16). பின்னர் தாவீது இறந்துவிட்டார்.

NOT LICENSED © GEOGRAPHY.BIBLE-HISTORY.COM NOT LICENSED
© 2003 Bible History Online

சாலமோன் ராஜா (967–931 BCE)



- <u>உலகின் தலைசிறந்த ஞானி</u>: சாலமோன்: தாவீது மறைவிற்கு பிறகு, சாலமோன் அரியணையில் ராஜாவாக அமர்த்தப்பட்டார். எருசலேமை சிறந்த தலைநகராக மாற்றும்படி பல புதுமைகளை ஏற்படுத்தினார். நவரத்தின கற்கள், தங்கத் தகடுகள் மற்றும் கேதாரு மரத்தினால் கர்த்தருடைய ஆலயத்தைக் பிரதிஷ்டை செய்தார் (2 நாளா 7:1–16).
- <u>செல்வ செழிப்பு</u>:. தங்கம், வெள்ளி, ஐவரி, குரங்குகள், மயில்கள், கேதுரு மரம் மற்றும் விலைமதிப்பற்ற கற்களைக் கொண்டு யூதாவை உலக வர்த்தக மையமாக மாற்றினார். சிறப்பான தொழில் செய்வதற்கு வசதியாக பல துறைமுகங்களை ஏற்படுத்தினார். வெண்கல சுரங்கங்களும் இரும்பு சுரங்கங்களும் இஸ்ரவேலில் தோண்டப்பட்டது. எகிப்தில் இருந்து சிலிசியன் குதிரைகள் மற்றும் இரதங்களை இறக்குமதி செய்தார். மேலும் அவருடைய தந்தையார் வென்ற தேசங்களில் இருந்து வந்த கப்பத்தினாலும் இஸ்ரவேல் தேசம் செல்வ செழிப்பாக இருந்தது.
- <u>ஞானம்</u>: சாலமோன் 3000 பழமொழிகள் மற்றும் 1005 பாடல்களும் இயற்றினார் (I இராஜா 4:30). சேபாவின் ராஜஸ்திரி சாலொமோனின் சகல ஞானத்தையும், அவர் கட்டிய அரன்மனையையும், எருசலேம் ஆலயத்தையும் கண்டு அநேக வர்த்தக உடன்படிக்கையும் சாலமோனோடு ஏற்படுத்திக்கொண்டாள் (1 இராஜா 10: 1–13).
- <u>கட்டிடக்கலைகள்</u>: சாலமோனின் ஆட்சியில் கட்டிடகலைகளும் சிறந்துவிளங்கியது. எருசலேம் ஆலயத்தை கட்டுவதற்றகு ஏழு ஆண்டுகளும், சாலமோனின் அரண்மனையை உருவாக்க பதின்மூன்று ஆண்டுகள் ஆகியது (I இராஜா 7: 1).
- <u>இன்ப மயக்கம்</u>: சாலொமோனுக்கு 700 மனைவிகளும் 300 மறுனையாட்டிகளும் இருந்தனர். பார்வோனின் மகள் மற்றும் மோவாப், அம்மோன், ஏதோம், சீதோன் மற்றும் ஏத்தியர்களின் பெண்கள் உட்பட (1 இராஜா 11: 2,3) பலரை சாலமோன் அரசியல் காரியங்களுக்காக திருமணம் செய்து கொண்டான். அவர்களுக்காக சிறந்த மாடமாளிகைகளையும் கட்டி, அவர்கள் வழிபட்ட தெய்வங்களுக்கு இஸ்ரவேலில் கோவில்களை கட்டியும் உருவ வழிபாட்டையும் கர்த்தரின் எச்சரிக்கையை மீறி அனுமதித்தார்.

சாலமோன் மரணம் (931 BCE):

- <u>நிர்வாகம்</u>: சாலமோன் ராஜாவாக பொறுப்பேற்றபோது, பொருளாதார ரீதியாக ஆட்சி செய்ய முயன்றார் (1 ராஜா 10:14–29). இதற்காக மக்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டது. அரசன் மற்றும் அரசியாளர்களின் மாடமாளிகைகளை கட்டுவதற்காகவும், அரசாங்க பணிகளுக்கும் என்று வரி வசூல் செய்வதற்கு இஸ்ரவேலை 12 மாகானங்களாக பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஆளுநர்களை நியமித்தார் (1 ராஜா 4:7).
- <u>எதிர்ப்பு</u>: சாலொமோனின் நடவடிக்கைகள் எருசலேமுக்கு அதிக சிறப்பைக் கொடுத்தன, ஆனால் இஸ்ரவேலின் பல பகுதிகளிலும் அதிருப்தியைத் தூண்டின. இதற்கிடையே ஏதோம் மற்றும் சிரியாவின் ராஜாக்கள் கப்பம் கட்டாமல் கிளர்ச்சி செய்தார்கள். மேலும், வடக்கு கோத்திர இஸ்ரவேலர்கள் சாலமோனின் அதிகபடியான வரிவிதிப்புகளை எதிர்த்தனர். மேலும் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் அதிகபடியான வருமானத்திற்கு அருகிலுள்ள நாடுகளில் உள்ள கனிம சுரங்கங்களில் வேலைக்கு இஸ்ரவேல் தொழிலாளர்களை குறைந்த ஊதியத்திற்காக அனுப்புவதையும் கடுமையாக எதிர்த்தார்கள். சாலமோன் பெரும்பாலான வடக்கு கோத்திரங்களின் வருமானத்தை தெற்கு கோத்திரங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தும் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தனர். இதனால் வடக்கு கோத்திரத்தார் சாலமோனின் ஆட்சியை விரும்பவில்லை. இது முழு இஸ்ரவேல் தேசத்தையும் பெரிதும் பலவீனப்படுத்தியது. .
- <u>யெரொபெயாம் கிளர்ச்சி</u>: இவர் வடக்கு கோத்திர தலைவர்களின் ஆதரவு பெற்ற தலைவராக இருந்து, சாலொமோன் ராஜாவின் ஊழியகாரனுமாய் இருந்தார் (1 இராஜா 11:26,28). இவர் சாலமோனுக்கு எதிரான கர்த்தரின் திட்டப்படி, அகியா தீர்க்கதரிசியால் வடக்கு கோத்திரங்களின் கிளர்ச்சியை செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டார். இதை சாலொமோன் கேள்விப்பட்ட படியினால், யெரொபெயாம் பயந்து எகிப்துக்கு தப்பி ஓடினார் (1 ராஜா 11: 9–13, 29–39). மரணம்: இந்நிலையில் 931BCE ல் சாலொமோன் ராஜா இறந்து போகவே, யெரொபெயாம் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வந்தார்.

Divided Kingdom இல்ரவேல் தேசத்தின் பிரிவினை (922–722):



- <u>ரெகொபெயாம்</u>: சாலொமோனின் மரணத்திற்குப் பிறகு, அவருடைய மகன் ரெகொபெயாம் ராஜாவாக அமர்த்தப்பட்டார். இவர் தனது தந்தையின் கொள்கைகளை இன்னும் அதிகமாகவே பின்பற்ற முயன்றார் (1 இராஜா 12:10–14). இவர் முதியோர்களின் ஞானமுள்ள ஆலோசனையை கேட்காமல், நண்பர்களின் ஆலோசனையை கேட்டு, மக்கள் மீது சுமத்தப்பட்ட வரிகளை குறைக்காமல், திமிராக பேசி வடக்கு கோத்திர மக்களின் உழைப்பை கட்டாயப்படுத்தினார். ஆகவே, 10 கோத்திரங்கள் ரெகொபெயாமை விட்டு பிரிந்து யெரொபெயாமைத் தங்கள் ராஜாவாகத் தேர்ந்தெடுத்தார்கள் (1 இராஜா 12: 16–20).

- <u>உள்நாட்டு யுத்தம்</u>: இஸ்ரவேல் இரண்டாக பிரிந்ததற்கு மக்கள் மீது சுமப்பட்ட வரிகள் மற்றும் குறைந்த சம்பளத்தில் மக்களை கனிம சுரங்கங்களில் வேலை செய்ய கட்டாயப்படுத்தியது போன்றவை முக்கிய பங்கு வகித்தது. இதனால் உள்நாட்டு யுத்தம் உண்டாகி, அநேக உயிர்சேதங்கள் ஏற்பட்டன. இஸ்ரவேலின் 10 கோத்திரங்கள் சாலொமோனின் மகன் ரெகொபெயாம் தங்களின் ராஜாவாக இருப்பதை நிராகரித்தார்கள். இதனால் இஸ்ரவேல் தேசம் இரண்டாக உடைந்தது. சமரியா வடக்கு தேசத்தின் தலைநகராகவும், எருசலேம் தெற்கு தேசத்தின் தலைநகராகவும் மாறியது.

- <u>இரண்டு தேசங்கள்</u>: வடக்கு தேசத்தில் 10 கோத்திரங்களான, எப்ராயீம், மனாசே, ஆசேர், செபூலோன், இசக்கார், சிமியோன், தான், நப்தலி, காத் மற்றும் ரூபன் கோத்திரங்கள் சேர்ந்து கொண்டது. இவை இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டது. தென் தேசத்தில் யூதா கோத்திரம் மாத்திரம் தாவீதின் குடும்பத்துக்கு விசுவாசமாக இருந்தது. பின்னர் பென்யமீன் கோத்திரம், யூதாவோடு சேர்ந்து கொண்டது. இவை யூதா என்று அழைக்கப்பட்டது.

- <u>இஸ்ரேலின் வீழ்ச்சி</u>: இந்த பிரிவினைக்குப் பிறகு இஸ்ரவேலும் யூதாவும் சுமார் 200 ஆண்டுகள் தனித்தனியாக ஆட்சி செய்து பெரும்பாலான நேரங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கொண்டார்கள். இதனால் இருவரும் பலவீனம் அடைந்தார்கள்.

The Divided Kingdom of Israel

Northern Kingdom of Israel
வடக்கு இராஜியம் (931-722 BCE):

ISRAEL	
Years (BC)	King
931 - 910	Jeroboam I
910 - 909	Nadab
909 - 886	Baasha
886 - 885	Elah
885 - 885	Zimri
885 - 880	Tibni
885 - 874	Omri
874 - 853	Ahab
854 - 853	Ahaziah
853 - 841	Joram
841 - 813	Jehu
813 - 796	Jehoahaz
798 - 782	Jehoash
792 - 751	Jeroboam II
751 - 750	Zachariach
750 - 750	Shallum
750 - 740	Menahem
740 - 738	Pekahiah
738 - 718	Pekah
718 - 709	Hoshea

- <u>மேலாதிக்கம்</u>: வடக்கு இராஜியமானது உம்ரி ராஜா(884 BCE) காலத்தில் அரசியல், பொருளாதார, இராணுவம் மற்றும் கட்டடக்கலைகளில் சிறந்து விளங்கியது(1 இராஜா 16:16). இஸ்ரவேல் இராஜியம், யோசேப்பி வீடு, அல்லது சமாரியா அல்லது எப்ராயீம் அல்லது இஸ்ரவேல் என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிறது.

- <u>தலைநகரங்கள்</u>: இஸ்ரவேல் இராஜியத்தின் தலைநகரம் முதலில் சீகேமில் இருந்தது. பின்னர் திர்சா வுக்கு மாற்றப்பட்டது. இறுதியா உம்ரி ராஜா சமாரியாவை தலைநகரமாக கட்டிக்கொண்டார்(1 இராஜா 16:24). வடக்கு இராஜ்யத்தின் முக்கிய நகரங்கள்: செக்கேம், திர்சா, சமாரியா, யாஃபா, பெத்தேல் மற்றும் தாண் ஆகும்.

- <u>ஒற்றுமை</u>: முதல் 60 ஆண்டுகளில், யூதாவின் ராஜாக்கள் வடக்கு இராஜியத்தின் மீது தங்கள் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்ட முயன்றார்கள். ஆகவே, எப்போதும் யுத்தம் நடந்துகொண்டே இருந்தது. டுத்த 80 ஆண்டுகளாக, வெளிப்படையான யுத்தம் நடைபெறவில்லை. ஒருவருக்கொருவர் நட்புடன் இருந்து தங்கள் பொதுவான எதிரிகளுக்கு, குறிப்பாக சிரியர்களுக்கு எதிரான யுத்தத்தில் இணைந்து செயல்பட்டார்கள்.

- <u>நல்லிணக்கம்</u>: யூதாவின் ராஜாவான யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபின் வீட்டோடு திருமணம் செய்துகொண்டபோது இஸ்ரேலுக்கும் யூதாவுக்கும் இடையிலான மோதல் தீர்க்கப்பட்டது. பின்னர்,யோசபாத்தின் மகன் யோராமுக்கும் ஆகாபின் மகள் அதாலியாவுக்கு திருமணம் நடைபெற்றதால் இரண்டு இராஜியமும் நட்பாக இருந்தது. வியாபாரத்திற்காகவும் ஒப்ந்தம் செய்து கொண்டார்கள்.

The fall of Samaria (722).
சமாரியாவின் வீழ்ச்சி (722):



- இரண்டு எதிரிகள்: கி.மு 9-7 நூற்றாண்டுகளுக்கு இடையில், அண்டை நாடுகள் பாபிலோனிய (கல்தேயர்) மற்றும் அசீரியா தென்மேற்கு ஆசியாவில் பலம் வாய்ந்ததாக மாறிக்கொண்டு இருந்தது. இஸ்ரவேல் இராச்சியம் சமவெளிகளால் இருந்தமையால் அவை விவசாயத்திலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கியது. மேலும், சர்வதேச வர்த்தக பாதைகள் இஸ்ரவேல் மற்றும் யுதாவின் வழியாக சென்றதால் மிகவும் செல்வசெழிப்பாக இருந்தது. ஆகவே அசீரியர்கள் இந்த வர்த்தக வழிகளைக் கைப்பற்ற விரும்பினார்கள்.
- விசுவாச துரோகம்: இஸ்ரவேல் இராச்சியத்தில் ஒன்பது வம்சாவழியினர்(Dynasty) ஆட்சி புரிந்தனர். இதனால் ஒருவருக்கொருவர் வன்முறையில் ஈடுபட்டார்கள். ஆகவே மூன்று வெவ்வேறு தலைநகரங்கள் உறுவாக்கப்பட்டன. மேலும் பெத்தேல் மற்றும் கில்கால் பகுதிகளில் எருசலேம் ஆலயத்திற்கு எதிராக இரண்டு ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. உருவ வழிபாடுகள், ஒழுக்கக்கேடுகள் மற்றும் அநீதியான காரீயங்கள் சமுதாயத்தில் ஆழமாகவும் வேகமாகவும் வடக்கு இராஜியத்தில் வேரூன்றியது. கர்த்தர் அவர்களின் மனந்திரும்ப வேண்டும் அல்லது நாடுகடத்தலுக்குத் தயாராக வேண்டும் என்று பல எச்சரிக்கையை கொடுத்தார் (ஏசா 10: 5,6, ஓசி. 11: 5; ஆமோ 4: 2). ஆனால் ராஜாக்கள் அருவருப்பான செய்து கொண்டே இருந்தார்கள்.
- அசீரிய படையெடுப்பு: இந்த காலகட்டத்தில் அசீரியா பேரரசு உலக அளவில் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்து, அருகில் இருந்த சிறிய நாடுகளை பயங்கரமாக, மிருகத்தனமாக தாக்கி தன்னோடு இணைத்துக்கொண்டது. அசீரிய பேரரசுக்கு சில இஸ்ரேல் ராஜாக்கள் கப்பம்கூட கட்டி, வந்தார்கள் (I இராஜா 20: 4, 2 இராஜா 15: 19-20). ஆனால் 726 BCE ல் அசீரியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக, ஓசேயா ராஜா அசீரியாவுக்கு கப்பம் கட்டவில்லை (2 இராஜா 17:3). ஆகவே அசீரிய பேரரசு வடக்கு இராச்சியத்தின் தலைநகரான சமாரியாவை முற்றுகையிட்டது. இந்த முற்றுகை மூன்று ஆண்டுகள் நீடித்தது, இறுதியாக சமாரியா கிமு 722 இல் அசீரியர்களிடம் தோற்றுப்போனது. உலக சரித்திரத்தில் இருந்து அழிந்தும் போயிற்று


URARTU
Territory at beginning of Tiglath-pileser III's reign in 745 BC
Caspian Sea
HITTITES
Carchemish
Haran
ASSYRIA
Maximum extent under Sargon II (714 BC)
Nineveh
ARAM
Ashur
Tigris River
MEDES
Harmath
Euphrates River
PHOENECIA
Byblos
Mediterranean Sea
Damascus
ARABU (ARABS)
Tyre
SYRIA
BABYLON
Babylon
PHILISTIA
Samaria
KEDAR
Susa
ELAM
Ashkelon
Jerusalem
Lachish
Raphia
JUDAH
Conquered by Sennacherib in 701 BC
On
Assyrian Empire
in Isaiah's Time (745-701 BC)
under Tiglath-pileser, Sargon, and Sennacherib
Persian Gulf
Elath
Nile River
EGYPT
Red Sea
© 2013, Ralph F. Wilson <pastor@joyfulheart.com>. All rights reserved.

The Kings of Northern Kingdom of Israel and the Bible

Kings of Israel (Northern Kingdom)			
Kings	**Yrs. of Reign**	**Dates B.C.**	**Biblical Reference**
Jeroboam I	22	976-954	1 Kings 11:26 - 14-20
Nadab	2	954-953	1 Kings 15:25-28
Baasha	24	953-930	1 Kings 15:27 - 16:7
Elah	2	930-929	1 Kings 16:6-14
Zimri	(7 days)	929	1 Kings 16:9-20
Omri	12	929-918	1 Kings 16:15-28
Ahab	21	918-898	1 Kings 16:28 - 22:40
Ahaziah	1	898-897	1 Kings 22:40 - 2 Kings 1:18
Jehoram (Joram)	11	897-885	2 Kings 3:1 - 9:25
Jehu	28	885-857	2 Kings 9:1 - 10:36
Jehoahaz (Joahaz)	16	857-841	2 Kings 13:1-9
Jehoash (Joash)	16	841-825	2 Kings 13:10 - 14:16
Jeroboam II	40	825-773	2 Kings 14:23-29
Zechariah	1/2	773-772	2 Kings 14:29 - 15:12
Shallum	(1 month)	772	2 Kings 15:10-15
Menahem	10	772-762	2 Kings 15:14-22
Pekahiah	2	762-760	2 Kings 15:22-26
Pekah	20	760-740	2 Kings 15:27-31
Hoshea	9	740-731	2 Kings 15:30 - 17:6

ConformingToJesus.com

அசீரிய சிறைப்பிடிப்பின் தாக்கம்



- அசீரிய சிறைப்பிடிப்பு: அசீரியர்கள் இஸ்ரவேல் இராஜியத்தைக் கைப்பற்றி, சிறைபிடிக்கப்பட்ட 27,290 இஸ்ரவேலர்களையும் அசீரியாவில் உள்ள கோசான் நதி ஓரத்தில் ஆலா, ஆபோர், நினிவே மற்றும் மேதியர்களின் பட்டணங்களுக்கு அடிமைகளாக கொண்டு சென்றார்கள் (II ராஜா 17: 1-6). இத்துடன் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் 10 கோத்திரங்கள் வரலாறு முடிவுக்கு வந்தது.
- தொலைந்துபோன 10 கோத்திரங்கள்: இஸ்ரவேலின் 10 கோத்திரத்தில் முக்கியமானவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் ற்றும் பணக்காரர்கள் நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில், அசீரியர்கள் அவர்களின் ஐக்கியத்தை உடைத்து, தேசிய அடையாளத்தை அழித்து, அவர்களை அசீரியர்களின் தெய்வங்களை பின்பற்ற கட்டாயப் படுத்தினார்கள். இதனால் காலபோக்கில் இந்த 10 கோத்திரத்தாரும் தங்கள் சொந்த அடையாளத்தை இழந்து போனார்கள். இந்த பத்து கோத்திரத்தாரும் நினிவே நோக்கி பயணித்தபோது, சிலர் மற்ற இடகளில் குடியமர்த்தப்பட்டார்கள். மேலும் பலர் ஐரோப்பா மற்றும் ஆசியா முழுவதும் சிதறடிக்கப்பட்டார்கள். தொலைந்துபோன 10 கோத்திரங்களை குறித்து வேதாகமத்தில் எந்த குறிப்பும் இல்லை.
- சமாரியர்கள்: நாடுகடத்தப்பட்ட இஸ்ரவேலருக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான அசீரியர்கள், இஸ்ரவேலின் இராஜியத்தில் குடியமர்த்தினார்கள். இவர்கள் தங்கள் தெய்வங்களின் சிலைகளையும் இஸ்ரவேலுக்கு கொண்டு வந்தார்கள். இப்படி புதிதாக குடியேறியவர்கள், எஞ்சியிருந்த இஸ்ரவேல் மக்களுடன் காலபோக்கில் சம்பந்தம் கலந்தனர். இதனால் ஒரு புதிய கலாச்சாரம் உருவாகியது. இம் மக்கள் சமாரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இந்த சமாரியர்கள் இஸ்ரவேலர்களின் பல நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டனர். மேலும் தோரா அவர்களின் வேதம் என்று ஏற்றுக்கொண்டார்கள். அப்படியே இஸ்ரவேலர்களின் மத சட்டங்களையும் பின்பற்றினார்கள். இந்த சமாரியர்களை யூதர்கள் வெறுத்து, இவர்களை தாழ்த்தப்பட்ட மக்களாக கருதினார்கள். ஏனெனில் இவர்கள் புற இனத்தாரோடு கலந்து, தங்கள் இனத்தின் புனிதத்தை தீட்டுபடுத்தி விட்டதாக யூதர்கள் ஒதுக்கி வைத்து அவர்களோடு கொள்வனையும் கொடுப்பனையும் நிறுத்திக்கொண்டார்கள்.

Southern kingdom of Judah
யூதா இராஜ்யம் (731-587 BCE):

JUDAH	
Years (BC)	King
931 - 914	Rehoboam
914 - 911	Abijah
911 - 870	Asa
870 - 845	Jehoshaphat
853 - 842	Jehoram
842 - 841	Ahaziah
841 - 835	Athaliah
835 - 795	Joash
796 - 767	Amaziah
789 - 737	Azariah
737 - 721	Jotham
730 - 715	Ahaz
715 - 686	Hezekiah
697 - 642	Manasseh
642 - 640	Amon
640 - 609	Josiah
609 - 609	Jehoahaz
609 - 598	Jehoiakim
608 - 598	Jehoiachin
598 - 587	Zedekiah

- <u>தெற்கு இராச்சியம்:</u> சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமை 10 கோத்திரங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து, ஒன்றாக இருந்த இஸ்ரவேல் தேசம் இரண்டாக உடைந்ததன் விளைவாக யூதா இராஜியம் ஏற்பட்டது. முதலில், யூதாவின் கோத்திரம் மட்டுமே தாவீதின் குடும்பத்தாருக்கு விசுவாசமாக இருந்தது, பின்னர் பென்யமீன் யூதாவுடன் சேர்ந்து கொண்டது.
- <u>யெகோவா கடவுளுக்கு எதிரான போராட்டம்:</u> இஸ்ரவேல் இரண்டாக உடைந்து முதல் 60 ஆண்டுகளில், யூதாவின் ராஜாக்கள் வடக்கு இராஜியத்தின் மீது மீண்டும் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றனர். ஆகவே இரண்டு இராஜியங்களுக்கும் இடையே போர் நடந்து கொடே இருந்தது (II இராஜா 15: 1-34, 2 நாளா 13: 2-3, 13- 20). கிமு 723 ம் ஆண்டு இஸ்ரவேலுக்கு எதிரான யுத்தத்தில், யூதா அசீரியாவுடன் கூட்டணி வைத்தது. அப்படியே இஸ்ரவேல், ஆராம் என்ற மற்றொரு தேசத்துடன் கூட்டணி வைத்தது. இந்த கடைசி யுத்தத்தில் அசிரிய பேரரசு, இஸ்ரவேலை முழுவதுமாகவே கிபி 722 ல் அழித்தது.
- <u>நல்லிணக்கம்:</u> யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வாரிசான யோசபாத் (873-849 BCE), இரண்டு இராஜியத்தின் ஒற்றுமைக்காக, வடக்கு இராச்சியத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இதற்கு அடையாளமாக யோசபாத்தின் மகன் யோராம், ஆகாபின் மகள் அதாலியாவை திருமணம் செய்து கொண்டார் (II இராஜா 8:18). ஆகவே இரண்டு இராஜியமும் இணைந்து தங்கள் எதிரிகளுக்கு எதிராக போராடினார்கள்(1 இராஜா 22:1-33, 2 இராஜா 3:4-7) அப்படியே வியாபாரத்திற்காகவும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் (2 நாளா 20: 35,36).

இஸ்ரேல் மற்றும் யூதா மீது அசீரிய பேரசின் ஆதிக்கம்:





- <u>இஸ்ரவேல் மீது அசீரியாவின் யுத்தம் (கிமு 733)</u>: யூதாவின் ராஜா ஆகாஸ் தனக்கு எதிராக யுத்தம் செய்யவந்த இஸ்ரவேலின் ராஜா பெக்கா மற்றும் ஆராமின் ராஜா ரெசினிடமும் இருந்து பாதுகாக்க, அசிரிய சாம்ராஜ்யத்திற்கு வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, யூதா இராஜியம், அசிரிய பேரரசுக்கு அடிமை ஆகிறது. இதனால் அசீரியா பேரரசு இஸ்ரவேலின் ராஜாவுக்கு எதிராக போரிட்டு வடக்கு இராச்சியத்தின் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றுகிறது (2 இராஜா 15:29).
- <u>அசீரியர் இஸ்ரவேலை கைப்பற்றுதல் (722 BCE)</u>: அசீரிய மன்னர் வடக்கு இராஜியத்தின் மீது 725 BCE படையெடுத்து சமாரியாவை முற்றுகையிட்டு, இறுதியாக மூன்று ஆண்டுகள் கழித்து சமாரியாவைக் கைப்பற்றுகின்றார் (II இராஜா 17: 5,6). இப்படியாக இஸ்ரவேலர்களின் வடக்கு இராச்சியம் முடிவுக்கு வந்தது.
- <u>யூதாவின் மீது அசீரியாவின் படையெடுப்பு (712 & 701 BCE)</u>: எசேக்கியா யூதாவின் ராஜாவாக இருக்கும்போது, அசீரியா பேரரசு யூதாவுக்கு விரோதமாக முற்றுகையிட்டு 712 இல் அதின் முக்கிய நகரங்களை கைப்பற்றுகிறது. இதற்காக எசேக்கியா ராஜா எருசலேம் ஆலயத்தின் கருவூலம் மற்றும் அரசாங்க கருவூலத்தையும் காலி செய்து கப்பம் செலுத்த வேண்டியதாய் இருந்தது (II இராஜா 18: 13–17). மீண்டும் கி.மு 701 இல் அசீரியா, எருசலேமை கைப்பற்றுவதகாக முற்றுகையிடுகிறது. அப்போது கர்த்தருடைய தலையீட்டினால் அசீரியா பேரரசு, எருசலேமை கைப்பற்ற முடியவில்லை. ஏனெனில் ஒரே நாள் இரவில் 1,85,000 அசீரிய இராணுவத்தினர் கர்த்தருடைய தூதனால் சங்கரிக்கப்பட்டார்கள் (II இராஜா 19:35, ஏசா 37:36).
- <u>யூதாவில் மனாசேவின் பாவம்</u>: மனாசே யூதாவின் ராஜாவாக எருசலேமை 55 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் அசீரியாவுடன் கூட்டணி வைத்து, தனது ராஜ்யம் முழுவதும் விக்ரக வழிபாட்டை ஊக்குவித்தார், புற தெய்வ கோவில்கள், கோவில் விபச்சாரம், மற்றும் குழந்தைகள் நரபலி போன்றவற்றை அனுமதித்தார். மனாசே ஏசாயா தீர்க்கதரிசியை தூக்கிலிட்டார். (2 இராஜா 21: 1–18, 24: 1–4). யூதாவில் கர்த்தருக்கு விரோதமாக மனாசே செய்த அறுவறுப்பினால் எரேமியா தீர்க்கதரிசி நான்கு வகையான அழிவுகள் நேரிடும் என்றார் (எரே 15: 3,4).

அசீரியா,எகிப்து மற்றும் யூதா மீது பாபிலோனிய பேரரசின் ஆதிக்கம்:

- <u>பாபிலோனிய பேரரசு:</u> பாபிலோனிய பேரரசர் நேபோபொலாசார் 626 BCE ல் வெற்றிகரமான படையெடுயின் மூலம், அசிரிய சாம்ராஜ்யத்தின் ராஜா அஷீர்பானிபேலை தோற்கடிக்கிறார். இவருக்கு பின்பு அவருடைய குமாரன் நேபுகாத்நேச்சார் II அறியணை ஏறினார்.
- <u>அசீரியாவின் அழிவு:</u> நேபோபொலாசரின் கீழ், அசீரியப் பேரரசு கிமு 625 இல் பாபிலோனியாவிலிருந்து வெளியேறியது. கிமு 614 ல் நடைபெற்ற யுத்தத்தில் அசீரியர்களின் பழைய தலைநகரான ஆஷூரை மேதியர்களும் பாபிலோனியர்களும் ஒன்றிணைத்து கைப்பற்றினர். கி.மு 612 ல் அசீரிய பேரரசின் தலைநகரான நினிவே பாபிலோனியரிடம் வீழ்ச்சியடைகிறது. அசீரியாவின் அழிவுடன், இப்போது பாபிலோன் பேர்ரசு உலக வல்லரசாக மாறியது. ஆகவே அருகிலுள்ள அனைத்து நாடுகளும் நேபுகாத்நேசாருக்கு கப்பம் கட்டியது. நினிவேயின் அழிவு இரண்டு தீர்க்கதரிசிகளால் முன்னுறைத்தபடியே சரித்திரத்தில் நிறைவேறியது (செப் 2: 13-15; நாகூம் 3).
- <u>மெகிதோ யுத்தம்:</u> கிமு 609 இல், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோ பாபிலோன் சாம்ராஜியத்திற்கு எதிராக யுத்தம் செய்யும்படி தனது கூட்டாளியான அசிரியா இராணுவத்திற்கு உதவி செய்ய தனது இராணுவத்தை வடக்கு சிரியாவுக்கு அழைத்துச் செல்லும்போது, யூதா ராஜ்யத்தால் கட்டுப்படுத்தப்படும் பிரதேசத்தின் வழியாக செல்ல வேண்டியிருந்தது. ஆனால் யூதாவின் ராஜாவாகிய யோசியா, எகிப்திய இராணுவத்தை கடந்து செல்ல அனுமதி மறுத்துவிட்டார். ஆகவே, மெகிதொவில் கடுமையான யுத்தம் நடைபெற்றது. இதில் யூதாவின் ராஜாவாகிய யோசியா மரணமடைந்து அவருடைய ராஜியத்தின் சில பகுதிகள் எகிப்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இதனால் யூதா எகிப்துக்கு கடுமையான கப்பம் செலுத்த வேண்டியதாய் இருந்தது (II இராஜா 23:29, II நாளா 35:20-25).

அசீரியா, எகிப்து மற்றும் யூதா மீது பாபிலோனிய ஆதிக்கம்

- 4). யூதாவின் ராஜா யோவாகாஸ்: யோசியாவின் மரணத்திற்குபின்பு அவருடைய குமாரன் யோவாகாஸ் யூதாவின் ராஜாவாக 608 BCE ல் அமர்த்தப்பட்டார். எகிப்திய ராஜா பார்வோன் நேகோ, மூன்று மாதங்கள் மட்டுமே ராஜாவாக இருந்த யோவாகாஸை பதவி நீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக அவருடைய அண்ணண் யோயாக்கீமை ராஜாவாக நியமித்து கப்பம் கட்ட செய்தார். (II நாளா 36: 1-4). ஆகவே யூதாவில், யோயாக்கீம் எகிப்தின் அடிமையாக ஆட்சி செய்கிறார். யோவாகாஸ் எகிப்துக்கு கைதியாக செல்லப்படுகிறார்
- 5). எகிப்தின் அழிவு (605 BCE): கி.மு 605-ல் காசெமிஷ் என்னும் இடத்தில் எகிப்தின் படைகள் அசீரிய இராணுவத்தோடு கூட்டணி வைத்து பாபிலோனியாவின் கூட்டணி படைகளான மேதிய, பெர்சிய மற்றும் சித்திய படைகளோடு கடும் யுத்தம் நடைபெற்றது. இதில் பாபிலோனிய சக்கரவர்த்தி நேபுகாத்நேச்சார், எகிப்து மற்றும் அசீரிய கூட்டணி படைகளை ஜெயிக்கின்றார். ஆகவே அசீரியா முழுவதும் பாபிலோனியரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இந்த யுத்தத்தில் எகிப்தும் பெரிய இழப்பை சந்தித்தது. எகிப்துக்கு எதிராக எரேமியாவால் முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறியது (எரே 46: 3-12). இப்போது நேபுகாத்நேசார் யூதாவின் மீது படையெடுத்துவந்து கப்பம் கட்ட கட்டுகிறார்.
- 6). விசுவாச துரோகத்தின் தாக்கம்: வேதாகமத்தின் முக்கிய கருப்பொருள் யெகோவா கடவுளுக்கு விசுவாசமாக இருப்பதுதான். யூதாவின் ராஜாக்களான எசேக்கியாவும், யோசியாவும் விக்கிரகாராதனையை தடைசெய்ததில் குறிப்பிடத்தக்கவர்கள், ஆனால் அவருடைய வாரிசுகளான மனாசே மற்றும் ஆமோன் விக்கிரகாராதனைக்கு ஊக்கம் கொடுத்தார்கள். இது கர்த்தருக்கு உக்கிர கோபத்தை ஏற்படுத்தியது. இவர்களை மனந்திரும்பவும், எச்சரிக்கவும், கர்த்தர் பல தீர்க்கதரிசிகளை அனுப்பினார், ஆனால் அவர்கள் மனம்திரும்பாமல் போய்விட்டார்கள். இவர்களுடைய விசுவாச துரோகம் யூதாவின் அழிவுக்கு காரணமாயிற்று (2 இராஜா 21:12, எரே 9:11, 13:9, 32:33, 44:14).

எருசலேமின் முதல் முற்றுகை (605 BCE)

- முதல் முற்றுகை: பாபிலோனிய சக்கவர்த்தி நேபுகாத்நேசார் எகிப்தை 608 BCE ல் தோழ்வியடைய செய்ததால் யூதாவின் ராஜா யோயாக்கிம், எகிப்துக்கு கப்பம் கட்டுவதை விட்டுவிட்டு பாபிலோனுக்கு கப்பம் கட்ட ஆரம்பித்தார்; ஆனால் 605 BCE ல் கப்பம் கட்டுவதை நிறுத்திவிட்டார். ஆகவே நேபுகாத்நேசார் முதன்முறையாக எருசலேம்மீது படையெடுத்தார் (2 இராஜா 24:1, தானி 1:1-3).

- <u>முதல் தடவை நாடுகடத்தப்படுதல் (605 BCE)</u>: சாலொமோன் ராஜாவால் கர்த்தரின் ஆலயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட பொற் பாத்திரங்கள் மற்றும் பொக்கிஷங்களையும், அரன்மணை பொக்கீஷங்களையும் நேபுகாத்நேச்சார் பறித்துக்கொண்டார். யூதாவின் இளம் பிரபுக்கள், அரச குடும்பத்தினர்கள், திறமையான கைவினை கலைஞர்கள் ஆகியோரை பாபிலோனுக்கு நாடு கடத்தினார்கள். இதில் தானியேலும் அவரது 3 நண்பர்களும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுகிறார்கள் (தானி 1: 1-4). 3).

- <u>எகிப்து பாபிலோனை விரட்டியது (601 BCE)</u>: கி.மு 601 ல் நேபுகாத்நேச்சார் எகிப்து மீது படையெடுத்து, அதை முழுவதுமாய் கைப்பற்ற முயனேறார். இடையே திடீரென நேபுகாத்நேசார் பாபிலோனுக்கு திரும்ப நேரிட்டது. ஆகவே அவருடைய தளபதி நேபுசராதான் யுத்தத்தை தொடர்ந்து நடத்தினார்: ஆனால் இதில் பெரும் இழப்புகளுடன் பாபிலோனிய படைகள் விரட்டப்பட்டது. இந்த தோல்வி பாபிலோனுக்கு எதிராக பல கிளர்ந்து எழுவதற்கு வழிவகுத்தது. யூதாவின் ராஜா யோகாக்கீம் பாபிலோனுக்கு எதிராக செயல்பட்டு, எகிப்துடன் கூட்டணி வைத்தார். எகிப்தியரோடு கூட்டணி வைக்கவேண்டாம் என்று ஏரேமியா கூறியதை யோகாக்கீம் உதாசீனப்படுத்திவிட்டார். இந்நிலையில் யூதர்களுக்கு நண்பர்களாக இருந்த பாபிலோனியர்களின் கைகளால் யூதா அழிக்கப்படும் என்று எரேமியா இறைவாக்குறைத்தார் (எரே 26: 1-6). இதையும்மீறி யூதாவின் ராஜா, எகிப்து உடன் கூட்டணி வைத்து, அதற்கு கப்பம் கட்டினார்.

எருசலேமின்மீது இரண்டாவது முற்றுகை (கிமு 597):

- எருசலேம் மீது முற்றுகை: யூதாவின் ராஜாவான யோயாக்கீம் பாபிலோனியாவை எதிர்த்து கப்பம் கட்ட மறுத்ததால், கி.மு 598 டிசம்பர் மாதத்தில் நேபுகாத்நேசார் எருசலேம் மீது மீண்டும் படையெடுத்தார். இந்த யுத்தத்தில் யூதாவின் ராஜா யோயாக்கீம் இறந்தார். ஆகவே அவருடைய குமாரன் யோயாக்கீன் 18 வயதில் ராஜாவாக்கப்பட்டார். சுமார் மூன்று மாத யுத்தத்திற்கு பிறகு கிமு 597 மார்ச் 16 அன்று நேபுகாத்நேச்சரால் எருசலேம் நகரம் கைப்பற்றப்பட்டது (II இராஜா 24: 1,2,8, II நாளா 36: 9).
- இரண்டாவது நாடுகடத்தல் (597 BCE): நேபுகாத்நேச்சார், யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன் மற்றும் யூதாவின் இளவரசர்கள், முக்கிய குடிமக்கள், பணக்காரர்கள், அறிவாளிகள், கைவினை கலைஞர்கள், கட்டிடக்கலை வல்லுனர்கள், இரும்பு ஆயுத கொல்லர்கள் ஆகியோருடன் 10,000 போர்வீரர்களையும் பாபிலோனுக்கு நாடு கடத்தத்தினார் (2 இராஜா 24: 12-16). இவர்களில் எசேக்கியேல் தீர்க்கதரிசியும் அடங்குவார். நேபுகாத்நேச்சார் எருசலேமின் ஆலயத்தில் இருந்த பொன், வெள்ளி பாத்திரங்களையும், பொக்கீஷங்களையும் மற்றும் அரசாங்க கருவூலத்திலிருந்து பொக்கீஷத்தையும் கைப்பற்றினார். இப்போது யூதாவுக்கு ராஜாவாக இருந்த யோயாக்கீனின் சித்தப்பா சிதேக்கியாவை யூதாவின் ராஜாவாக நியமித்து, அவரை கைப்பாவையாக வைத்துக்கொண்டார் (2 இராஜா 24: 10-17).
- சிதேக்கியாவின் கிளர்ச்சி: கி.மு 590 ல் சிதேக்கியா ராஜா பாபிலோனுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து, எகிப்துடன் கூட்டணி வைத்தார் (2 இராஜா 24: 17-20; எரே 34:, 2-22). ஆகவே நேபுகாத்நேச்சார் மீண்டும் எருசலேமை முற்றுகையிட்டார். இந்நிலையில் பார்வோனின் எகிப்திய இராணுவம், எகிப்திலிருந்து எருசலேம் நோக்கி வந்துகொண்டு இருந்தது. இந்த செய்தியைக் கேட்டதும், பாபிலோனிய இராணுவம் எருசலேமில் இருந்து பின் வாங்கியது. மீண்டும் எரேமியா யூதாவுக்கு எதிராக இறைவாக்கு உரைத்தார் (எரே 37: 5-10).

எருசலேமின்மீது மூன்றாவது முற்றுகை (589 BCE):

- மூன்றாவது முற்றுகை: பாபிலோனிய பேரரசர் நேபுகாத்நேச்சார் கி.மு 589 ல் மீண்டும் எருசலேமுக்கு விரோதமாக முற்றுகையிட்டார்கள். இந்த முற்றுகை சுமார் 30 மாதங்கள் நீடித்தது. இதனால் பயங்கரமான பஞ்சம் எருசலேமில் உண்டாயிற்று (2 இராஜா 25: 3; புலம் 4: 4, 5, 9). சிதேக்கியா ராஜாவும், அவருடைய குடும்பத்தாரும் இரவுநேரத்தில் தப்பித்துக்கொள்ள வெளியேறினார்கள். ஆனால் நேபுகாத்நேச்சார் படைகள் அவர்களை சுற்றிவளைத்தது (2 இராஜா 25: 8-11, எரே 52: 10-13).
- மூன்றாவது நாடுகடத்தல் (586 BCE): சிதேக்கியா ராஜா பாபிலோனியர்களால் சிறைபிடிக்கப்பட்டு, அவருடைய கண்கள் முன்பதாக அவருடைய குமாரர்கள் மற்றும் எருசலேம் ஆலய ஆசாரியர்கள் எல்லோரையும் வெட்டிப் படுகொலை செய்து, இறுதியாக சிதேக்கியா ராஜாவின் கண்களை குருடாக்கி, இரண்டு வெண்கல விலங்குகளை போட்டு பாபிலோனுக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் யூதாவின் பிரபுக்கள், செல்வாக்கு மிக்கவர்கள், பணக்காரர்கள், கைவினை கலைஞர்கள் மற்றும் 4,600 பேர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர் (2 இராஜா 25: 1-21, எரே 2: 29,30).
- எருசலேம் ஆலயத்தின் அழிவு: நேபுகாத்நேசாரின் படைகள் கி.மு 586 ல் யூதாவின் பெரும்பகுதிகளை அழித்தது. பாபிலோனிய படைகள் எருசலேம் ஆலயத்தையும் எருசலேம் நகரத்தையும் தீயிலிட்டு எரித்தார்கள். எருசலேம் ஆலயத்தின் கலாச்சார சாதனங்கள் உட்பட நகரத்தில் விலை மதிப்புள்ள பொருட்கள் எல்லாவற்றையும் பாபிலோனுக்கு எடுத்துச் சென்றார்கள் (II இராஜா 25: 8-10). யூதா தேசத்தில் நாடுகடத்தப்படாத ஏழை மக்கள், சரீர குறைபாடு கொண்டவர்கள், மற்றும் முதிர்வயதானவர்களை தவிர யாரும் அங்கு குடியிருக்க அனுமதிக்கப்படவில்லை (எரே 52:16). இப்படியாக யூதாவின் இராச்சியம் முடிவுக்கு வந்தது.

எருசலேமின் அழிவிற்கு பிந்தைய நிகழ்வுகள்



- எருசலேமின் அழிவுக்கு பின்பு (586 BCE): நேபுகாத்நேசார் யூதாவின் முக்கியமான தலைவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் மற்றும் பணக்காரர்களை பாபிலோனுக்கு நாடுகடத்திய பின்பு யூதாவில் எஞ்சி இருந்த ஏழைகள், வயதானவர்கள் மீது, கெதலியா என்ற யூத ஆளுநரை நியமித்து, அவரோடு சில பாபிலோன் இராணுவ வீரர்களையும் பாதுகாப்பிற்காக நியமித்தார். எருசலேம் நகரம் முழுமையும் இடித்து தள்ளப்பட்டதால், நிர்வாகத்திற்காக மிஸ்பா என்ற இடத்தை மையமாக வைத்து கெதலியா கவனித்து வந்தார். (2 இராஜா 25: 22–24; எரே 40: 6–8). அப்படியே நேபுகாத்நேசார் ஆயிரக்கணக்கான பாபிலோனியர்களை யூதாவிற்கு அழைத்து வந்து குடியமர்த்தினார்.
- எரேமியா தீர்க்கதரிசி: பாபிலோனியர்கள் எரேமியா தீர்க்கதரிசியிடம் மிகுந்த தயவாய் நடந்துகொண்டார்கள். ஆகவே எரேமியா விருப்பப்படி ஆளுநர் கெதலியாவுடன் மிஸ்பாவுக்குச் சென்று தங்கி இருந்தார். யூதரான கெதலியா யூதாவின் ஆளுநராக நியமிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு, மோவாப், அம்மோன், ஏதோம் மற்றும் பிற நாடுகளுக்கு தப்பி ஓடிய யூதர்கள் மீண்டும் யூதாவுக்குத் திரும்பினார்கள் (எரே 40: 1–12).
- இளவரசர்களின் கிளர்ச்சி: கெதலியா பாபிலோனிய காவலர்களுடன் மூன்று மாதங்கள் ஆளுநராக பணிபுரிந்துகொண்டு இருக்கும்போது யூத அரச குடும்பத்தை சேர்ந்த உறுப்பினர்கள் கெதலியாவையும் பாபிலோன் இராணுவத்தினரையும் படுகொலை செய்தார்கள். இதற்கு பாபிலோன் இராணுவம் தகுந்த பதிலடி கொடுத்து, பல யூத தலைவர்களை தூக்கிலிட்டார்கள். மேலும் 852 பேர் பாபிலோனியாவுக்கு நாடுகடத்தினார்கள். இந்த பழிவாங்கலுக்குப் பயந்து, யூதர்களில் ஒரு குழுவினர் தப்பிப்பதற்காக எகிப்து தேசத்திற்கு போக விரும்பினார்கள். ஆனால் அவர்களை எகிப்துவுக்கு போகவேண்டாம் என்று ஏரேமியா இறைவாக்குறைத்தார் (எரே 42:7–22). ஆனால் எரேமியாவின் எதிர்புகளையும் மீறி அவரையும் எகிப்துக்கு அழைத்து சென்றார்கள் (2 இராஜா 25: 25–26, எரே 43: 5–7).
- எரேமியாவின் மரணம்: எரேமியா ஒரு தார்மீக பாதுகாவலராக அவர்களுடன் எகிப்துக்கு சென்றார். எகிப்தில் இருந்தபோதும்கூட அவர் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட யூதர்களுக்கும் எகிப்தில் உள்ள யூதர்களையும் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார் (எரே 44: 1–29). பின்னர் கி.மு 570 ல் எரேமியா தீர்க்கதரிசி தொடர்ந்து எகிப்திய யூதர்களின் தவறுகளை கடிந்துகொண்டார். ஆகவே அவர்மீது எரிச்சல்பட்ட யுதர்கள் அவரை கல்லெரிந்து கொன்றதாக பாரம்பரிய செய்தி கூறுகின்றது.

Neo-Babylonian Empire

Nabopolassar, Nebuchadnezzar II, Nabonidus, Belshazzar (625-539 BC)

© 2013, Ralph F. Wilson <pastor@joyfulheart.com>. All rights reserved.


Captivity of
Israel and Judah
Black Sea
Lydia
Phrygia
Caspian Sea
Tigris River
Assyria
Aleppo
Euphrates River
Nineveh
Media
Riblah
Asshur
Aram
Mediterranean Sea
Sidon
Tyre
Damascus
Ectabana
Babylonia
Israel
Babylon
Samaria
Ammon
Susa
Judah
Borsippa
Persia
Nippur
Jerusalem
Moab
Uruk
Elam
Memphis
Edom
Ur
Arabia
Egypt
Persian Gulf
Nile River
Red Sea
Assyria takes Israel into captivity
Babylon takes Judah into captivity
Assyria takes Gentiles to fill Israel
ConformingToJesus.com

Kings of Judah (Southern Kingdom)

Kings	Yrs. of Reign	Dates B.C.	Biblical Reference
Rehoboam	17	976-959	1 Kings 11:42 - 14:31
Abijah	3	959-956	1 Kings 14:31 - 15:8
Asa	41	956-915	1 Kings 15:8-24
Jehoshaphat	25	915-893	1 Kings 22:41-50
Jehoram (Joram)	8	893-886	2 Kings 8:16-24
Ahaziah	1	886-885	2 Kings 8:24 - 9:29
Athaliah (Queen)	6	885-879	2 Kings 11:1-20
Joash (Jehoash)	40	879-840	2 Kings 11:1 - 12:21
Amaziah	29	840-811	2 Kings 14:1-20
Uzziah (Azariah)	52	811-759	2 Kings 15:1-7
Jotham	18	759-743	2 Kings 15:32-38
Ahaz	19	743-727	2 Kings 16:1-20
Hezekiah	29	727-698	2 Kings 18:1 - 20:21
Manasseh	55	698-643	2 Kings 21:1-18
Amon	2	643-640	2 Kings 21:19-26
Josiah (Josias)	31	640-609	2 Kings 22:1 - 23:30
Jehoahaz (Joahaz)	(3 months)	609	2 Kings 23:31-33
Jehoiakim	11	609-597	2 Kings 23:34 - 24:5
Jehoiachin	(3 months)	597	2 Kings 24:6-16
Zedekiah	11	597-586	2 Kings 24:17 - 25:30

ConformingToJesus.com

The Kings of the Divided Kingdom of Israel and Judah

Kings of Israel (North)	Kings of Judah (South)
Jeroboam I: Led secession of Israel	**Rehoboam**: Son of Solomon; first king
Nadab: Son of Jeroboam I	**Abijah (Abijam; Abia)**: Son of Rehoboam
Baasha: Overthrew Nadab	**Asa**: Probably son of Abijah
Elah: Son of Baasha	**Jehoshaphat**: Son of Asa
Zimri: Overthrew Elah	**Jehoram (Joram)**: Son of Jehoshaphat; husband of Athaliah
Omri: Overthrew Zimri	**Ahaziah**: Son of Jehoram and Athaliah
Ahab: Son of Omri; husband of Jezebel	**Athaliah**: Daughter of King Ahab of Israel and Jezebel; wife of Jehoram; only queen to rule over Judah
Ahaziah: Son of Ahab	**Joash (Jehoash)**: Son of Ahaziah
Jehoram (Joram): Son of Ahab	**Amaziah**: Son of Joash
Jehu: Overthrew Jehoram	**Uzziah (Azariah)**: Son of Amaziah
Jehoahaz (Joahaz): Son of Jehu	**Jotham**: Regent, later King; son of Uzziah
Jehoash (Joash): Son of Jehoahaz	**Ahaz**: Son of Jotham
Jeroboam II: Son of Jehoash	**Hezekiah**: Son of Ahaz; husband of Hephzi-Bah
Zechariah: Son of Jeroboam II	**Manasseh**: Son of Hezekiah and Hephzi-Bah
Shallum: Overthrew Zechariah	**Amon**: Son of Manasseh
Menahem: Overthrew Shallum	**Josiah (Josias)**: Son of Amon
Pekahiah: Son of Menahem	**Jehoahaz (Joahaz)**: Son of Josiah
Pekah: Overthrew Pekahiah	**Jehoiakim**: Son of Josiah
Hoshea: Overthrew Pekah; kingdom overthrown by Assyrians under Sargon II	**Jehoiachin**: Son of Jehoiakim
Good · Bad · Mixture of good & bad	**Zedekiah**: Son of Josiah; kingdom overthrown by Babylonians under Nebuchadnezzar

ConformingToJesus.com

The Prophets of Israel and Judah

Prophet	Prophesied To	Dates (B.C.)
Jonah	Assyria	Before Captivity (800-650)
Nahum	Assyria	Before Captivity (800-650)
Obadiah	Edom	Before Captivity (800)
Hosea	Israel	Before Captivity (750)
Amos	Israel	Before Captivity (750)
Isaiah	Judah	Before Captivity (800-606)
Jeremiah/ Lamentations	Judah	Before Captivity (800-606)
Joel	Judah	Before Captivity (800-606)
Micah	Judah	Before Captivity (800-606)
Habakkuk	Judah	Before Captivity (800-606)
Zephaniah	Judah	Before Captivity (800-606)
Ezekiel	Judah	During Captivity (606-536)
Daniel	Judah	During Captivity (606-536)
Haggai	Judah	After Captivity (536-400)
Zachariah	Judah	After Captivity (536-400)
Malachi	Judah	After Captivity (536-400)

ConformingToJesus.com

உடன்படிக்கைப் பெட்டியின் மர்மம்

- உடன்படிக்கை பெட்டி: இது கடவுளின் பெட்டி என்றும் அழைக்கப்பட்டது (I சாமு 3: 3). இது கர்த்தர் சீனாய் மலையில் மோசேக்குக் கொடுத்த மாதிரியின்படியே உருவாக்கப்பட்டது. இதில் மோசேயின் பெற்றுக்கொண்ட பத்து கட்டளைகளின் இரண்டு கற்பலகைகளும், ஆரோனின் துளிர்த்த கோலும், மற்றும் ஒரு பாத்திரத்தில் மன்னா ஆகியவையும் இருந்தது. கர்த்தர் மோசேயுடன் இரண்டு கேருபீன்களின் மத்தியில் இருந்து பேசினார் (யாத் 25:22, எண் 7:89). யுத்தத்திற்கு செல்லும்போது இஸ்ரவேலர்கள் தங்களுடன் எடுத்துச் செல்வார்கள். இதன் மூலம் பல வெற்றிகள் பெற்றார்கள். தாவீது ராஜா இந்த பெட்டிக்கு முன்பதாக நடனம் ஆடினார். (யாத் 25:22, யோசு 3:13, 6: 1–5, 2சாமு 6:14).
- கர்த்தரின் பெட்டி எங்கே?: கி.மு 586 ல் பாபிலோனியர்கள் எருசலேமை கைப்பற்றினார்கள். அந்த நேரத்தில் எருசலேம் ஆலயத்தில் இருந்த உடன்படிக்கை பெட்டிக்கு என்ன ஆனது? இரண்டு முக்கிய குறிப்புகள்: 1). பாபிலோனியர்கள் எருசலேமை கைப்பற்றுவதற்கு முன்பு, உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் எத்தியோப்பியாவுக்கு எடுத்துச் சென்றதாகவும், அது இன்று அங்குள்ள St. Mary of Zion பேராலயத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் திருச்சபையின் பொறுப்பாளர்கள் ஒருபோதும் இதை யாரும் பார்க்கவோ, அல்லது நம்பகத்தன்மைக்காக ஆய்வு செய்யவோ இன்றுவரை அனுமதிக்கவில்லை. 2). எருசலேம் ஆலயம் 586 ல் தீயிலிட்டு அழிக்கப்படுவதற்கு முன்பு அங்கிருந்த ஆசாரியர்கள் எருசலேம் ஆலய வளாகத்தில் பெரிய பள்ளம் தோண்டி அங்கே உடன்படிக்கை பெட்டியை புதைத்து வைத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இதையும் இப்போது ஆராய்ச்சி செய்யமுடியாது. ஏனெனில் இந்த இடத்தின்மீது இப்போது இஸ்லாமியர்களின் புனித Dome of Ark மசூதி கட்டப்பட்டுள்ளது. உடன்படிக்கை பெட்டிக்கு என்ன ஆனது என்று வேதாகமத்தில் குறிப்பு இல்லை. இது அழிக்கப்பட்டதா?, வேறு யாரும் கைப்பற்றினார்களா? அல்லது எங்காவது மறைக்கப்பட்டுள்ளதா? என்பது யாருக்கும் தெரியாத இரகசியமாகவே உள்ளது.

நாடுகடத்தப்பட்ட யூதர்களின் வாழ்க்கை

- <u>நாடுகடத்தல்</u>: நாடு கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான யூதர்கள் அடிமைகளாக பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே கேபார் நதிகரையோரத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். யூதர்களின் நாடுகடத்தல் அவர்களுக்கு அவமானத்தின் உச்சகட்டமாக கானப்பட்டது. ஏனெனில் அவர்களின் நிலம், எருசலேம் தேவாலயம், கர்த்தரின் பிரசன்னம், தாவீதின் வம்சத்தார் ஆளுகை இப்போது ஒன்றுமில்லாமல் போய்விட்டது. அவர்கள் பாபிலோன் ஆறுகள் அருகே உட்கார்ந்து அழுது புலம்பினார்கள் (சங் 137).
- <u>ஜீரனிக்க முடியாத கேள்விகள்</u>: எருசலேம் ஆலயம் ஏன் அழிக்கப்பட்டது? (சங் 46: 5) யெகோவா கடவுளால் தன்னுடைய சொந்த ஆலயத்தையே பாதுகாக்க முடியாமல் போய்விட்டதோ? நேபுகாத்நேச்சரின் தெய்வமான மார்துக், யெகோவாவைவிட பெரிய கடவுளா? (சங் 91:1) தனது சொந்த ஆலயத்தை கூட அழிவிலிருந்து பாதுகாக்க முடியாத யெகோவாவை விட, நேபுகாத்நேசாரின் தெய்வம் மார்துக் உண்மையான கடவுளாக இருந்தாரா? நாம் கடவுளின் பிள்ளைகள் அல்லவா? பின்னர் தம்முடைய வாக்குறுதிகளுக்கு எதிராக எப்படி செயல்பட முடியும்?(லேவி 20:26) யெகோவாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட யூதாவின் ராஜாவை அவிசுவாசிகள் தோற்கடிக்க எப்படி அனுமதிக்க முடியும்? தாவீது குடும்பத்தாரோடு பண்ணிய உடன்படிகையை கர்த்தர் எவ்வாறு மீறமுடியும்? (II சாமு 7:16) போன்ற பல கேள்விகளுக்கு பதில்கிடைக்காமல் புழுங்கினார்கள்.
- <u>நாடுகடத்தப்படுவதற்கான காரணம்</u>: எருசலேமின் அழிவு மற்றும் நாடுகடத்தப்படுவது என்பது யெகோவாவின் தண்டனை என்று எரேமியாவும் எசேக்கியேலும் கூறினார்கள். யூதாவின் ராஜாக்கள் மற்ற எல்லா தெய்வங்களையும் வணங்கி, உண்மை தெய்வமாகிய யெகோவாவை வணங்கத் தவறியதற்கான தண்டனைகள் என்று விளக்கினார்கள். ஆகவே அவர்களின் நரகலான விக்ரகங்களைவிட்டு கர்த்தரிடம் மனம்திரும்ப அழைப்பு கொடுத்தார்கள். அப்போது கர்த்தர் மன்னிப்பார் என்று நம்பிக்கையான இறைவாக்க உரைத்தார்கள் (எசே 14: 6, புல 1: 5, 8, 22, 2: 1-10; 4: 11-16).

நாடுகடத்தப்பட்ட யூதர்களின் சமூக வாழ்க்கை

- <u>சுதந்திரம்:</u> பாபிலோனியர்கள் தாங்கள் நடத்திய போர்களில் மிகவும் கொடூரமாக இருந்தாலும், நாடுகடத்தப்பட்ட யூதர்களை குறித்ததான அவர்களின் அணுகுமுறை நேர்மறையாகத்தான் இருந்தது. நேபுகாத்நேசாரின் மகன் மெரோடாக், நாடுகடத்தப்பட்ட யூத மன்னர் யோயாக்கீனை சிறையிலிருந்து விடுதலை செய்து, அவருக்கு அங்கே அரச அரண்மனையில் குடியிருக்க வசதி ஏற்படுத்தி கொடுத்தார். அங்கே யோயாக்கீனுக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தார்கள்.
- <u>பதவிகள் மற்றும் வேலைவாய்ப்புகள்:</u> தானியேல் மற்றும் அவரது மூன்று நண்பர்களான அனனியா, அசரியா மற்றும் மிஷாவேல் ஆகியோரின் நீதியான வாழ்க்கை, ஞானம், விவேகம் ஆகிய காரணங்களுக்காக பாபிலோனிய தேசத்தில் உயர்ந்த பொறுப்புகளை வகித்தார்கள். நாடுகடத்தப்பட்ட யூதர்கள், குறைந்த பட்சம், பாபிலோனியாவின் உள்ளூர் மொழிகள், இலக்கியங்கள், கலாச்சாரம் மற்றும் சட்ட மரபுகளை குறுகிய காலத்திற்குள் ஏற்றுக்கொண்டனர்.
- <u>ஆறுதல்:</u> பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டவர்களுக்கு எரேமியா கடிதம் எழுதி, அங்கே வீடுகளைக் கட்டவும், தோட்டங்களை வளர்க்கவும், கர்த்தருக்கு பயந்து சாதாரண வாழ்க்கையை வாழவும் வலியுறுத்தினார் (எரே 29: 1-23). எசேக்கியேல் யூதர்கள் திரும்பவும் நாடு திரும்புவார்கள் என்றும் புதிய எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டப்படும் என்றும் இறைவாக்குறைத்தார் (எசே 40-48). இரண்டாவது ஏசாயா(40-55), வரலாற்றைக் ஆழ்கின்ற கடவுள், யூதர்கள் பாபிலோனியாவிலிருந்து சீயோனுக்கு புறப்பட்டு கெம்பீரமாய் வருவார்கள் என்று இறைவாக்குறைத்து அவர்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தார். இதன் மூலம் யூதர்கள் உண்மையான கடவுள்மீது நம்பிக்கை கொண்டார்கள் (ஏசா 40: 1 -11).

நாடுகடத்தப்பட்ட யூதர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை:



- *சீயோன் பற்றிய இறையியல்:* எசேக்கியேல் பரலோக தேர் (Heavenly Chariot) மற்றும் எதிர்கால புதிய எருசலேம் ஆலயம் பற்றி இறைவாக்குறைத்தார். இதன் மூலம் யெகோவா அவர்களை கைவிடவில்லை என்று அவர்களுக்குச் சொன்னார் (எசே 10:9, 44:4). துரா பள்ளத்தாக்கில் உலர்ந்த எலும்புகளை உயிரடைய செய்தல் (எசே 37:1-14) போன்ற இறைவாக்கு செய்திகள், நாடுதிரும்புவோம் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு கொடுத்தது. எசேக்கியேல் மற்றும் ஏசாயா இருவரும், இஸ்ரவேலர் மீண்டும் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்றும் மீண்டும் தாவீதின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்றும் இறைவாக்கு உரைத்தார்கள். இது யூதர்களுக்கு ஆறுதலும் சமாதானமும் கொடுத்தது.

- *சமூக பொருளாதார வாழ்க்கை:* யூதர்கள் நாடுகடத்தப்பட்ட காலத்தில் பாபிலோனின் அராமைக் மொழி சர்வதேச மொழியாக இருந்தது. ஆகவே யூதர்கள் அராமைக் மொழியை பேசத் தொடங்கினர், இந்த மொழியில்தான் யூதர்களின் பெரும்பாலான தால்மூத் எழுதப்பட்டுள்ளது. தால்மூத் என்பது வேதாகம விளக்க உரைகள், யூத மத சட்டதிட்டங்கள் மற்றும் கோட்பாடுகள் ஆகும். பாபிலோனில் உள்ள நாடுகடத்தப்பட்டவர்கள் யூதாவில் இருந்ததைவிட பொருளாதார ரீதியாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் பலப்பட்டவர்களாகவும், சமுதாயத்தில் அந்தஸ்தும் செல்வாக்கும் நிறைந்தவர்களாகவும் உயர்ந்தனர்.

- *ஜெப ஆலயங்களின் வளர்ச்சி:* குடும்பத்தின் பெரியவர்கள் யூத சமூகங்களை மேற்பார்வையிட்டு தங்கள் தேசிய அடையாளத்தையும் மற்றும் மத அடையாளத்தையும் பாதுகாத்துக்கொண்டார்கள். யூத எழுத்தாளர்கள் யூதமதக் கதைகளும், யூதர்களின் வரலாறும் அழிந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில் அவை எல்லாவற்றையும் எழுதி பாதுகாத்தார்கள். இந்த நேரத்தில், விருத்தசேதனம், உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் ஓய்வு நாள் அனுசரிப்பு போன்றவை முக்கியத்துவத்தைப் பெற்றது. இதனால் ஜெப ஆலயங்கள் தோன்ற ஆரம்பித்தது. பின்னர் ஓய்வுநாளில் ஜெப ஆலயங்களிலும் பின்னர் யூதர்களின் வீடுகளில் கூடிவந்து ஆராதனை செய்தார்கள். இந்த ஐக்கியம் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை கொடுத்தது.

பாபிலோனின் வீழ்ச்சி (539 BCE)



- <u>பாபிலோனின் வீழ்ச்சி</u>: பாபிலோனிய ராஜாவாக நேபுகாத்நேச்சரின் பேரன் பெல்ஷாத்சார் கிமு 555 ல் சட்டவிரோதமாக Amel-Marduk ராஜாவின் ஆட்சியை தூக்கியெறிந்துவிட்டு தனது தந்தை Naboniduz கீழ் பாபிலோனை ஆட்சி செய்துவந்தார். இந்நிலையில்கிமு 539 ல் தன்னுடைய இராஜாங்கத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஆயிரம் பிரபுக்களை அழைத்து, அவர்களுக்கு ஒரு பெரிய விருந்து அளித்தார். அப்போது எருசலேமில் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன், வெள்ளி பாத்திரங்களில் பெல்ஷாத்சார் ராஜாவும், அவர் மனைவிகளும், வைப்பாட்டிகளும், அவருடைய பிரபுக்களும் மதுபானம் ஊற்றி குடிக்கிறார்கள்.

- <u>பெல்ஷாத்சார் படுகொலை</u>: விருந்து நேரத்தில் மனுஷ கைவிரல்கள் தோன்றி சுவரில் மெனே, மெனே, தெக்கெல், உப்பார்சின் என்ற எழுதிற்று. பயந்துபோன பெல்ஷாத்சார் அதைப்படிக்க தனது ஞானிகளை அழைக்கிறார், ஆனால் அவர்களால் முடியவில்லை. அப்போது ராஜாத்தி மூலமாக அழைக்கப்பட்ட தானியேல் அதை வாசித்து, இது பாபிலோனின் வீழ்ச்சியை பற்றி யெகோவா முன்னறிவிக்கிறார் என்று விளக்கி, இஸ்ரவேலின் கடவுளாகிய யெகோவாவிடமிருந்து வந்த தீர்ப்பு என்றும் தானியேல் கூறினார். அன்றிரவு மேதிய ராஜா தரியு திட்டத்தின்படி பெல்ஷாத்சார் அவருடைய பிரதானிகள் மூலமாக படுகொலை செய்யப்படுகிறார் (தானி 5 :30,31).

- <u>பெர்ஷீய மன்னன் கோரேஸ்</u>: கிமு 539 ல் பெர்சிய ராஜா கோரேஸ் பாபிலோனிய பிரதானிகளின் உதவியோடு யுத்தம் இல்லாமல் பாபிலோனை கைப்பற்றி 62 வயதான தன்னுடைய மாமாவான Cyaxares II என்ற மேதியனை பாபிலோனுக்கு ராஜாவாக நியம்மிக்கிறார். ஏசாயா மற்றும் எரெமியா தீர்க்கதரிசிகள் இறைவாக்கின்படி பாபிலோனிய இராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது (Isa 13:17, Jer 51:11). இப்போது மத்திய தரைக்கடல் பகுதியில் பெர்சீய சாம்ராஜியம் வல்லரசாக உறுவெடுத்தது.

Bibliography

1.John Bright, A History of Israel, 3d ed. (Philadelphia, 1981).

2.John Bowden, A History of Israel in Old Testament Times, 2d ed. (Philadelphia, 1981).

3.Peter R. Ackroyd, Israel under Babylon and Persia (London, 1970).

4.T. H. Robinson, A History of Israel, 2 vols (1932); H. M. Orlinsky, Ancient Israel (1954).

5.J. B. Pritchard ed., Ancient Near Eastern Texts Relating to the Old Testament, 2nd ed. (1955).

6.L. H. Grollenberg, Atlas of the Bible, tr. J. M. H. Reid (1956).

7.Albright, W. F. Biblical Period from Abraham to Ezra: An Historical Study, London, Harper, 1963.

8. Alt, A. Essays on Old Testament history and religion. Doubleday, London, 1967.

9.Finkelstein I. and Silberman N., The Bible Unearthed: Archaeology's New Vision of Ancient Israel and the Origin of Its Sacred Texts, New York, Free Press 2002

10. Kitchen, K. A. Ancient Orient and Old Testament New York, Inter Varsity Press, 1975.

11.Laird, Harris, R. Exploring the Basics of the Bible, New York, Crossways Books, 2002

12.Moscati, S. Semites in Ancient History, University of Wales, London, 1959

13.Renn, S. Expository Dictionary of Bible Words: Word Studies for Key English Bible Words Based on the Hebrew And Greek Texts, Sydney, Hendrickson Publishers 2005

14.Speiser, E.A. found in Freedman, D The Anchor Bible, Volume 1, Doubleday, London 1998.

15. G. E. Wright and F. V. Filson, The Westminster Historical Atlas to the Bible, rev. ed. (1956).

16.M. Noth, The History of Israel, 2nd ed. (New York : Harper & Row,1960).

17.F. F. Bruce, Israel and the Nations (USA: Inter Varsity Press,1963).

18. R. K. Harrison, Introduction to the Old Testament (USA: Hendrickson Publishers, 1970).

THE END.

Produced By: Gamaliel Bible College, Mumbai, India
For Your Feedback: ddavidmumbai@gmail.com

God Bless You to Bless Others…